விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பதினாறு

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 கார்த்திகை 24 வியாழக்கிழமை (10.12.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 356








புதுமாத்தளனுக்கு விஜயம் செய்து ஜனாதிபதி திறந்து வைத்த நினைவுச் சின்னத்தையும், நினைவுச் சின்னம் அமைந்துள்ள பாலமூடாக ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் செல்வதையும் படங்களில் காணலாம்.

# அமெரிக்காவின் உதவி அமைச்சர் ஜனாதிபதி-பொன்சேகாவுடன் பேச்சு

## ஜனாதிபதித் தேர்தல் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் தென்னாசிய மற்றும் மத்திய ஆசியாவுக்கான உதவி வெளி விவகார அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவையும், எதிர்க்கட்சி ஜனாதிபதி வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகாவையும் தனித்தனியாகச் சந்தித்துப் பேசியுள்ளார். எதிர்வரும் ஜனவரி 26 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித்தேர்தல் தொடர்பாகவே இப்பேச்சுக்கள் இடம் பெற்றுள்ளதாக தெரியவருகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## சுதந்திரக்கட்சி அலுவலகம் நேற்று திறந்து வைப்பு

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட அலுவலகம் 4 ஆம் குறுக்குத் தெருவில் நேற்று திறந்து வைக்கப்பட்டது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட அமைப்பாளர் வே.தங்கராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கட்சியின் அலுவலகத்தை அதன் செயலாளரும் கல்வி அமைச்சருமான சுசில் பிறேம ஜெயந்த திறந்துவைத்தார்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவச் சிப்பாய் சுட்டுத் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி தபால் பெட்டி சந்திப் பகுதியில் இராணுவச் சிப்பாய் ஒருவர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவர் காவற்கடமையில் இருந்த போது நேற்று முன்தினம் இரவு தற்கொலை செய்து கொண்டுள்ள

(16ஆம் பக்கம் பார்க்க)

## புதுமாத்தளனில் இராணுவ நினைவுத் தூபி ஜனாதிபதி மகிந்த நேற்று திறந்துவைத்தார்

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முதற்தடவையாக வன்னிப்பகுதிக்கும் மடுத் தேவாலயம் மற்றும் இடம் பெயர்ந்தவர்களுக்கான மெனிக்பாம் நிவாரண முகாமிற்கும் விஜயம் செய்தார்.

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினர்களுக்கும் இடையே இறுதிச் சமர் இடம் பெற்றதாக தெரிவிக்கப்படும், புதுமாத்தளன் பகுதிக்குச் சென்ற ஜனாதிபதி போரினால் உயிரிழந்த இராணுவத்தினருக்கான நினைவுத் தூபி ஒன்றினை திறந்து வைத்து படைவீரர்கள் மத்தியில் உரையாற்றினார்.

முப் படைகளின் தளபதிகள், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரும் ஜனாதிபதியுடன் இந்த விஜயத்தின் போது கலந்து கொண்டிருந்தனர்.

இதனையடுத்து மடுத்தேவாலயத்திற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சென்று அங்கு இடம் பெற்ற விசேடவழிபாட்டில் கலந்து கொண்டதாக மன்னார் மறைமாவட்டத்தின் குரு முதல்வர் அருட்தந்தை

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதித் தேர்தலில் சுயேட்சைக்குழு போட்டி

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலில் போட்டியிடுவதற்காக சுயேட்சைக்குழுவின் சார்பில் நேற்று கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

யாழ். மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினராக ஐ.எம். இலியாஸ் என்பவராலேயே இக்கட்டுப்பணம் செலுத்தப்பட்டது.

இவர் தனது பிரசார பணியை நாடுமுழுவதும் மேற்கொள்ளவுள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. (ச)

## ஜனாதிபதிக்காக காத்திருந்து ஏமாற்றத்துடன் வீடு திரும்பிய காணாமல்போனோரின் உறவுகள்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதியை சந்திப்பதற்காக காத்திருந்த, யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோரின் உறவுகள் ஜனாதிபதி வருகை தராததால் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினர். வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்ற புத்தகம் கையளிக்கும் நிகழ்வில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலவச பாடநூல் வழங்கும் நிகழ்வு நேற்று வேம்படியில்!

### ஜனாதிபதி மகிந்த செய்ம்மதி மூலம் உரை

(யாழ்ப்பாணம்)

2010ஆம் கல்வியாண்டிற்கான மாணவர்களுக்கு இலவச பாடநூல் வழங்கும் தேசிய வைபவம் நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரியில் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் டபிள்யூ டி.புஷ்பகுமார தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதிகளாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, சமூக சேவைகள் மற்றும் சமூக

(16ஆம் பக்கம் பார்க்க)




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## இதழியல் கல்லூரிக்கான புதுமுகப் பரீட்சை

(கொழும்பு)

இலங்கை ஊடகவியலாளர் கல்லூரியின் ஊடகவியல் டிப்ளோமா 2010இற்கான புதுமுகப் பரீட்சை எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு இல.96, கிருல வீதி, கொழும்பு 5இல் அமைந்துள்ள இலங்கை இதழியல் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

விண்ணப்பித்தவர்களுக்கு பரீட்சைக்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அக் கடிதங்கள் கிடைக்காதவர்களும் இப் பரீட்சைக்கு தோற்ற முடியும் என இதழியல் கல்லூரி நிர்வாகம் அறிவித்துள்ளது.

மேலதிக விபரங்களை 0115353635 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாம். (சு)

## தென்மராட்சிக் கல்வி வலய பரீட்சை மண்டப ஒழுங்கு

க.பொ.த.(சா/த)-2009 பரீட்சைக்கு நலன்புரி நிலையங்களில் இருந்து கைதடி முத்துக்குமாரசுவாமி ம.வி. மண்டப இலக்கம்-3 இல் புதிய பாடத்திட்டத்தில் தோற்றும் மாணவர்களிற்குரிய மண்டபம் ஏ-9 வீதியில் அமைந்துள்ள கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலய இடம்பெயர்ந்த பாடசாலை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

மேலும் தென்மராட்சி வலயத்தில் நலன்புரி நிலைய மாணவர்களில் பழைய பாடத்திட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டப இலக்கம்-5இல் தோற்றும் மாணவர்களிற்குரிய மண்டப ஒழுங்கு ஏ-9 வீதியில் அமைந்துள்ள கைதடி முத்துக்குமாரசுவாமி இடம் பெயர்ந்த பாடசாலையில் இடம்பெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆ.வேதநாயகம் அறிவித்துள்ளார். (சு)

## தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களின் இடமாற்றத்தை ஒத்திவைக்க நடவடிக்கை



(யாழ்ப்பாணம்)

தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களின் இடமாற்றத்தை ஒத்தி வைக்க நடவடிக்கை எடுப்பதாக கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜெயந்த உறுதியளித்துள்ளார்.

நேற்று அவரைச் சந்தித்த வடமாகாண ஆசிரியர் சங்க உறுப்பினர்களிடம் இவ் உறுதி மொழி வழங்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் தற்காலிக இணைப்புப் பெற்ற ஆசிரியர்களும், ஏனைய ஆசிரியர்களுமாக ஐந்நூறு வரையான ஆசிரியர்கள் பங்கு பற்றிய பொதுக் கூட்டம் நேற்று ஆரிய குளம் உயர் கல்வி நிலையத்தில் காலை 11.30 மணிக்கு ஆரம்பமானது.

பதிவு செய்யப்படுவதன் அவசியம் வலியுறுத்தப்பட்டதை அடுத்து பொதுச்சபையால் வடமாகாண ஆசிரியர் சங்கம் நேற்று அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டு அதன் நிருவாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டதுடன் சுவட்த் திகதிலும் தீர்மானிக்கப்பட்டன.

வட மாகாண ஆசிரியர் சங்கம் தெரிவானதை அடுத்து முதற்கட்டமாக ஆசிரியர்கள் நேற்று பொதுசன ஐக்கிய முன்னணி காரியலயத்தில் கல்வி அமைச்சர் சுசில் பிறேம் ஜெயந்தவைச் சந்தித்துப் பேசினர்.

இச்சந்திப்பிற்கு சங்கத் தலைவர் சி.ஞானாகரன் தலைமை தாங்கினார். அதனைத் தொடர்ந்து சிறப்பு மனுவும் கல்வி அமைச்சரிடம் நேரில் கையளிக்கப்பட்டது.

அதனை பெற்றுக் கொண்ட கல்வி அமைச்சர் பதிலளிக்கையில், எமது இடமாற்றப் பிரச்சனை தொடர்பாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் இளங்கோவனுடன் கலந்துரையாடி மேலும் சில மாதங்களுக்கு இடமாற்றத்தை ஒத்திப் போட நடவடிக்கை எடுப்பதாக உறுதி அளித்தார்.

அத்துடன் வட மாகாணத்திலுள்ள அனைத்து மாவட்ட ஆசிரியர்களும் எதிர் நோக்கியுள்ள பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முழு நடவடிக்கையும் எடுக்கப்படும். மேலும் ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றி 2000ஆம் ஆண்டு முதல் சேவை நிரந்தரமாக்கப்பட்ட ஆசிரியர்களின் சேவைக் கால நீடிப்பு குறித்து சாதகமாக பரிசீலிப்பதாகவும் அவர் கூறினார். (சு)

## மக்கள் வங்கியின் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியின் யாழ்ப்பாணப் பிரதேச விள்ளயாட்டுக் கழகம் நடத்தும் விளையாட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30மணிக்கு யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மக்கள் வங்கியின் பிரதம நிறைவேற்று அதிகாரி பி.வி.பத்திரனவும், கௌரவ விருந்தினராக மக்கள் வங்கியின் சர்வதேச வர்த்தகம், திறைசேரி சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் என். வசந்தகுமாரும் கலந்து கொள்ளவுள்ளனர். (சு-14)


## மரண அறிவித்தல்

## வைரவன் இராமசாமி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட வைரவன் இராமசாமி நேற்று *(09.12.2009)* காலமானார்.

அன்னார் கமலாதேவியின் அன்புக் கணவரும், மனோகரன் (யாழ்.மாநகர சபை), சசிகரன் (யாழ்.மாநகர சபை), ருதீஸ்கரன் (மேற்பார்வையாளர் யாழ்.மாநகர சபை), இ.தயாகரன் (யாழ்.போதனா வைத்தியசாலை), சத்தியாகரன் (யாழ்.மாநகர சபை) கிருபாகரன் (பாதுகாவலர் யாழ்.மாநகர சபை), தயாநந்தி, கஜிதாகரன் (டோகா), ஜீவநந்தி, மதிகரன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று *(10.12.2009)* நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக கோண்டாவில் கோட்டைக்காடு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*நாராயணன் வீதி,*
*கோண்டாவில் கிழக்கு,*
*கோண்டாவில்.*

தகவல்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(4154)



## காணி விற்பனைக்கு

வட்டுக்கோட்டை கிழக்கில் வீடுகள் கட்டக் கூடிய 4 பரப்புக் காணி கிணற்றுடனும், 2 பரப்பு வெற்றுக் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:-
மு.தேவராஜன்
சங்கரத்தைச் சந்தி,
வி.சி. முன்பாக.

(C-3895)



## யாழ். நகரில்...

யாழ்.பல்கலைக் கழக ஆய்வுக் கட்டுரைகள்




- ரைப்செற்றிங் $A_4$ 1- 35/-
- பைன்டிங் 2 புத்தகம்-900/-

ஆகியன சிறந்த முறையில் உடனுக்குடன் செய்து கொடுக்கப்படும்.

**புதிய மஹாத்மா பிறின்டேர்ஸ்**

இல.40, இந்து மகளிர் வீதி, கந்தர்மடம்

(4153)



## யாழ் நகரில் *மிகக்குறைந்த கட்டணங்களில்*

**BRITISH COLLEGE OF HIGHER STUDIES**

BCHS

**வழங்கும் சர்வதேச கற்கை நெறிகள்**

**Post Graduate Diploma in Management (Pre.MBA)**
(MBA final (Topup) in UK / London) 【காலம் 9 மாதங்கள்】
**To Whom :** பட்டதாரிகள், **(BA,Bsc)** வியாபார பட்டதாரிகள் அந்தஸ்து அற்றவர்கள் உயர்தொழில் நுட்பக்கல்லூரி மாணவர்கள் **(HNDM, HNDA)**

**Diploma in English** 100 % வெற்றி
100 % பயிற்சி **Advanced Diploma in English**
【காலம் 6 மாதங்கள்】
மாணவர்கள் ஆங்கிலத்தில் தங்களின் உயர்கல்வியினை தொடரவும், ஆங்கிலத்தில் சரளமாக உரையாடுவதற்கும் ஏற்றவிதமாய் பிரத்தியேகமாக தயாரிக்கப்பட்டுள்ளது
ஒரு நிறுவனத்தைச் சேர்ந்த / தனிப்பட்ட குழு உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட (Special) முறையில் வகுப்புகள் ஒழுங்கு படுத்தித் தரப்படும். அத்துடன் நல்ல கட்டணக் கழிவும் தரப்படும்.

**Foundation Diploma In Hospitality Management** (Topup degree in UK / London)
【காலம் 6 மாதங்கள்】 Hotel Management
இவ் 6 மாதக் கற்கை நெறியினை முடித்தவர்கள் அவர்களின் 2 வருடப் **(Degree)** பட்டப்படிப்பை லண்டனில் **(London - UK)** கற்கமுடியும்.
கல்வித்தகைமை: G.C.E (O/L) பயின்றிருந்தால் போதுமானது, மேலதிகவிபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

**Access Programming**
(Foundation Degree Programme)
【காலம் 6 மாதங்கள்】
**O/L** முடித்த மாணவர்கள் அல்லது **A/L** லில் நல்லபெறுபேறுகள் அல்லாதவர்களும் இப்பாட நெறியினைப் பூர்த்தி செய்து **Higher National Diploma & Degree** போன்ற கற்கை நெறிகளைக் கற்று, **Bsc, BBA,MBA** பட்டதாரி ஆக முடியும்.

அதிக வருவாய் நல்ல வேலைவாய்ப்பு
**Foundation Diploma In Nursing**
(Health & Social Care)
**Topup degree in UK / London**
【காலம் 6 மாதங்கள்】
கல்வித் தகைமை (G.C.E (O/L) பயின்றிருத்தல் போதுமானது மேலதிக விபரங்களுக்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

மாணவர்களுக்கு **100 % Student Visa** பெற்றுக்கொள்வதற்கு அனுபவம் வாய்ந்தஎமது சட்டத்தரணிகளால் உத்தரவாதம் அளிக்கப்படும். விபரங்களை அறியவும், அறிவுரைகளுக்கும் காலதாமதம் செய்யாது இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளுங்கள்

**Foundation Diploma In Management** 【காலம் 6 மாதங்கள்】
(For BBA Degree Programme) Minimum Requirement : G.C.E. (O/L)
இப்பாட நெறியின் 2 வருடப் பட்டப்படிப்பை நீங்கள் லண்டனில் பூர்த்திசெய்து BBA பட்டதாரி ஆகலாம்.
தனிப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்கள் **Management** துறையிலே தங்களின் அறிவை மேம்படுத்திக் கொள்வதற்காகவும் இப்பாட நெறியில் இணையலாம்.

**Second Floor,**
**No.15, Sirampiyadi Lane**
**(Off Stanley Road)**
(ஆரியகுளச்சந்திக்கு அருகாமையில்)
(கொசி Hotel மேலே)
Tel :021 2224550 E-mail: info@bchs.lk
HotLines: 0773501499
0777222422/ 0714299935



## க.பொ.த (உ/த) பரீட்சையினை மேற்கொண்டு பல்கலைக்கழகத்திற்கு தெரிவான மாணவர்களே உங்களிற்கு

இலங்கையில் 45 வருடகாலம் மக்களிற்கு காப்புறுதிச் சேவையினை மேற்கொண்டுவரும் பிரபல அரச காப்புறுதி நிறுவனமான இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மாபெரும் வேலைவாய்ப்புடன் கூடிய பயிற்சி நெறியினை வழங்கவுள்ளது.

* 06 மாதகாலப் பயிற்சிநெறி.
* பயிற்சி நெறிமுடிவில் அரச அங்கீகாரம் பெற்ற நிறுவனத்தினால் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையும் மாணவர்களுக்கு அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்.
* பயிற்சி நெறியினை பூரணமாக்கும் மாணவர்களுக்கு , பல்கலைக்கழகப்படிப்புடன் கூடிய பகுதிநேர வேலைவாய்ப்பு
எனப் பல நன்மைகளை வழங்கக் காத்திருக்கின்றது.

மேற்படிப் பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் தங்களின் சுயவிபரக்கோவையினை

**30.12.2009 இற்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.**
**விண்ணப்ப முகவரி: விற்பனை முகாமையாளர் - ஆயுள்**
**இலங்கைக் காப்புறுதிக் கூட்டுதாபனம் வீரசிங்கம் மண்டபம், யாழ்ப்பாணம்.**

குறிப்பு :- க.பொ.உ.த.பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களும், மேற்படி பயிற்சி நெறிக்கு விண்ணப்பிக்கலாம். உயர்பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவார்கள். (C-3874)



## மாபெரும் மலிவு விற்பனை

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்க

**01.12.2009 முதல் 31.12.2009 வரை**

சகல விதமான துணிவகைகள் மற்றும் றெடிமேற் ஆடைகள் என்பனவற்றை விசேட கழிவு விலையில் மலிவாக பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்



**லைடன் புடைவை நிலையம்**

இல.40, ஆஸ்பத்திரி வீதி, (பஸ் நிலையம் முன்பாக) யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 2381

## இன்று ஒரு தகவல்

# மனதுக்கு ஓய்வு

எனக்குத் தெரிந்த காவல்துறை அதிகாரி ஒருவர் இருந்தார். மிகவும் கண்டிப்பானவர். அவரைக் கண்டாலே எல்லோரும் பயப்படுவார்கள்.

அப்படிப்பட்டவர்... வீட்டுக்குப் போனால் அடியோடு மாறிவிடுவார். அங்கே போய்ப் பார்த்தால் குழந்தைகளோடு குழந்தையாக விளையாடிக் கொண்டிருப்பார்.

அலுவலக சமயத்தில் பார்த்தீர்களானால்... குதிரையின் மேல் உட்கார்ந்திருப்பார்.

வீட்டில் பார்த்தீர்களானால்... அவரது முதுகில் குழ ந்தை உட்கார்ந்திருக்கும். அவர் குதிரை போல் போய்க் கொண்டிருப்பார்.

''இது எப்படி உங்களால் முடிகிறது'' என்று கேட்டேன்.

''அது ஒன்றுமில்லை. வீட்டுக்கு வந்தவுடன் என்னுடைய மனசைத் தனியாக எடுத்து வைத்து விடுவேன்'' என்றார்.

''அது என்ன உங்கள் சட்டைப் பையிலா இருக்கிறது. அதைத் தனியாக எடுத்து வைப்பதற்கு'' என்றேன்.

''அப்படியில்லை. இது ஒரு பயிற்சி... மனப் பயிற்சி'' என்றார். இப்படிச் சமயம் பார்த்து மன சைத் தனியாக வைத்து விடத் தெரிந்தவர்கள் வாழ்க்கையில் எப்பொழுதும் உற்சாகமாக இருப்பார்கள்.

ஒரு டாக்டர்... ஆஸ்பத்திரியில் இருக்கும் வரைக்கும் டாக்டராக இருக்கலாம். மனைவியிடமும் அவர் டாக்டராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

ஒரு வக்கீல்... நீதிமன்றத்தில் இருக்கும் வரைக்கும் வக்கீலாக இருக்கலாம். வீட்டுக்கு வந்த பின்னரும் வக்கீலாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

நாம் எப்படி இருக்க வேண்டும்?

பெரியவர்கள் என்ன சொல்கிறார்கள் தெரியுமா? மனதைச் சோரவிடாமல் வாழ்க்கையைக் கவனிக்க வேண்டும்.

மனம் என்பது நமக்கு உபயோகப்படக்கூடிய ஒன்று தான். எப்பொழுது தேவையோ அப்பொழுது எடுத்து உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டும்.

கடைக்குப் போய் ஒரு பொருள் வாங்குகிறோம். காசு கொடுக்கிறோம். மீதிச் சில்லறை சரியாக இருக்கிறதா? என்று எண்ணிப் பார்த்து வாங்க வேண்டியிருக்கிறது. அந்தச் சமயத்தில் மனத்தை எடுத்து தனியாக வைத்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

பரீட்சைக்கு படிக்க வேண்டியிருக்கிறது. படித்ததையெல்லாம் நினைவில் வைத்திருக்க வேண்டியிருக்கிறது. அந்தச் சமயத்தில் மனசைத் தூக்கியெறிந்து விட்டேன் என்று சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது. அப்படிச் சொன்னால் பரீட்சை நம்மைத் தூக்கியெறிந்து விடும். அதனால் தேவைப்படும் போது மனதை உபயோகப்படுத்த வேண்டும். தேவையில்லாத பொழுது, அதைத் தனியாக ஓய்வெடுக்க விட்டு விட வேண்டும்.

இப்படி நாம் பழக்கப்படுத்திக் கொண்டால் வாழ்க்கை என்பது நமக்கு புதிதாய்த் தோன்றும். மனதுக்கும் ஒரு சக்தி கிடைக்கும்.

குழந்தைகள் மன தைச் சுமந்து கொண்டிருப்பதில்லை. இது முதியவர்கள் குழந்தைகளிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டிய பாடம்.

ஒரு தாத்தாவும் பேரனும் விளையாடிக் கொண்டிருந்தார்கள்.

''தாத்தா எனக்குச் சைக்கிள் ஓட்டக் கற்றுக் கொடுங்கள்'' என்றான் பேரன்.

''சைக்கிள் உயரம் கூட இல்லை. அதற்குள் சைக்கிள் ஓட்டப் போகிறாயா?'' என்றார் தாத்தா.

''ஏன் தாத்தா...? ரயில் ஓட்டுறாரே... அவர் என்ன ரயிலளவு நீளமாகவா இருக்கிறார்?'' என்றான் பையன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# 40 தமிழ்க் கலைஞர்களுக்கு கொழும்பில் கலாபூஸணம் விருது வழங்கப்படவுள்ளது

## 15ஆம் திகதி வைபவம்

(கொழும்பு)

2009 ஆம் ஆண்டுக்கான கலாபூஷணம் விருது வழங்கும் வைபவம் எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1 மணிக்கு கொழும்பு 07 ஆனந்த குமாரசாமி மாவத்தையில் அமைந்துள்ள ஜோன் டீ சில்வா ஞாபகார்த்த கலையரங்கில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை கலாசார அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டுள்ளது. கலாசார மரபுரிமைகள் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்தனவின் தலைமையில் இவ்விழா நடைபெறும்.

இவ்வாண்டு விருதுபெறும் தமிழ் கலைஞர்கள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நியமித்த மதிப்பீட்டுக் குழுவினர் மூலம் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இக்கலைஞர்களுக்கான அழைப்பிதழ்கள் இந்த சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் மூலம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு மொத்தமாக 40 தமிழ் கலைஞர்கள் கலாபூஷணம் விருது பெறுகின்றனர்.

இவர்கள் அனைவரும் 15 ஆந் திகதி மு.ப 10.30க்கு முன் ஜோன் டிசில்வா ஞாபகார்த்த கலையரங்கு மண்டபத்திற்கு சமூகமளிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விருது பெறும் தமிழ் கலைஞர்களின் விபரம் வருமாறு,

கந்தையா குணராசா (செங்கை யாழியன்) யாழ்ப்பாணம், (இலக்கியத்துறை), வேலுப்பிள்ளை குமாரசாமி, யாழ்ப்பாணம் (இலக்கியம், சொற்பொழிவு), செல்லப்பா நடராசா யாழ்ப்பாணம், (இலக்கியத் துறை), முடியப்பு அருள்பிரகாசம், யாழ்ப்பாணம், (நாட்டுக்கூத்து, நாடகம்), சங்கரப்பிள்ளை புவனேஸ்வரன் யாழ்ப்பாணம், (நாடகம் நடித்தல்), வயிரமுத்து இராசையா, யாழ்ப்பாணம், (நாட்டுக்கூத்து), சந்தியா தேவசகாயம் (நாட்டுக்கூத்து), சிங்கராஜர் செபமாலை யாழ்ப்பாணம், (நாட்டுக்கூத்து), குருநாதன் பொன்னுத்துரை, யாழ்ப்பாணம் (நாடகம்), தம்பன் சற்குருநாதன், யாழ்ப்பாணம், (இசை, நாடகத்துறை), உருத்திராபதி இராதாகிருஸ்ணன் யாழ்ப்பாணம், (வயலின்), முத்துக்குமாரு சின்னத்தம்பி பாலசிங்கம், யாழ்ப்பாணம், (தவில், கஞ்சிரா), நல்லரசு முருகானந்தன், யாழ்ப்பாணம், (தவில்), குருநாதர் பொன்னையா சிவகுருநாதன், யாழ்ப்பாணம் (இசைத் துறை), நாகர் செல்லமுத்து, யாழ்ப்பாணம் (இசைக்கச்சேரி, வானொலிப் பாடகர்), ஆசை இராசையா, யாழ்ப்பாணம், (ஓவியம்), கோவிந்தபிள்ளை வேலுப்பிள்ளை, யாழ்ப்பாணம் (ஓவியம், சிற்பத்துறை), பொன்னம்பலம் வவுனியா (சிற்பம், இசைத் துறை), கணபதிப்பிள்ளை கிருஸ்ணப்பிள்ளை, மட்டக்களப்பு (இலக்கியம், நாட்டுக்கூத்து), கணபதி இளையதம்பி மட்டக்களப்பு (நாட்டுக்கூத்து) கார்த்திகேசு சிவலிங்கம் மட்டக்களப்பு (நாடகம், இலக்கியத்துறை) பூமலர் சிவராசா மட்டக்களப்பு (இலக்கியம், வானொலி கலைஞர்) சந்தனம் அந்தோனி முத்து இருதயம் மத்தியூ அம்பாறை (இலக்கிய நாடகம்) நல்லதம்பி பூபாலரத்தினம், (நீலாபாலான்) அம்பாறை (இலக்கியத் துறை), கோபால் இராமச்சந்திரன் திருகோணமலை (திருமுறை ஓதல்) பாலகிருஸ்ணன் வயிரவநாதன் கொழும்பு (இலக்கியத்துறை) அருணாசலம் நமசிவாயம் கொழும்பு (புல்லாங்குழல்), அப்புக்குட்டி ஜெயகௌரி கொழும்பு (கலைச்சேவை), கலாநிதி அருட்திரு அரசரத்தினம் ஐயாத்துரை கொழும்பு, (கல்வி நிகழ்ச்சி தயாரிப்பாளர், அமைப்பாளர் ரூபவாஹினி, இ.ஒ.கூ.) இராஜேஸ்வரி ஜெகாநந்தகுரு கொழும்பு, (வீணை, சமய நூல்கள் எழுதல்), தம்பு துரைராஜா கொழும்பு (இந்து சமயத்துறை நூல் வெளியிடல்), செபஸ்தியன் மாசிலாமணி மன்னார், (நாட்டுக்கூத்து), மாத்தளை பெ.வடிவேலன் மாத்தளை (இலக்கியத்துறை), கருப்பையா வேலுஇராமசாமி கண்டி, (இலக்கியம், பத்திரிகை), கருப்பன் மாரிமுத்து செல்லையா (குருதேவன்) பதுளை (நாடகம், இசை), அறுக்காஞ்சிப்பிள்ளை மரியதாஸ் (மனோகரன்) கம்பஹா, (பராம்பரிய நாட்டுக்கூத்து) விஸ்வாசம் திவ்வியநாயகம் போல்ராஜ் நுவரேலியா, (நாடகம்) ஆறுமுகம் முத்தையா நுவரேலியா (எழுத்து, நாடகம், சமூகம்), பொன்னையா பூபாலன் கண்டி, (கவிதையும் நாடகமும்) இராஜா ஆறுமுகம் கேகாலை (இசை, ஓவியம்.)

(ஓ-6)

## இராசி பலன்

10-12-2009
(கார்த்திகை 24 வியாழக்கிழமை)
நவமி முன்னிரவு 7.35 மணிவரை
உத்தரம் பிற்பகல் 3.20 மணிவரை
இராகுகாலம் 1.49-3.19 மணிவரை
சுபநேரம் 7.49-9.19 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | செய்தொழில் விருத்தி, எடுத்த காரியம் கைகூடும், தனவருவாய், |
| இடபம் | அஜீரணக் கோளாறு, வேலைச் சுமை, முயற்சி தாமதம், தாழ்ந்த |
| மிதுனம் | மனச்சஞ்சலம், செய்தொழில் விருத்தி, ரோக நிலை, காரிய |
| கடகம் | மனோதைரியம், நற்கீர்த்தி, |
| சிங்கம் | போசன சுகக்குறைவு, கோபப்படு |
| கன்னி | வெகுமானம், தொழில்நன்மை, |
| துலாம் | சோம்பல் நிலை, குடும்பக் கவலை, |
| விருச்சிகம் | எதிர்பாராத நன்மை, காரிய அனுகூலம், உறவினர் வருகை, |
| தனுசு | பிரபுத்தனம், கலந்துரையாடல், |
| மகரம் | பித்த ரோகம், எதிர்பாராத செலவு, கட்டுப்பாடு, வீண் பயம், |
| கும்பம் | மனக்கவலை, பொருள் விரயம், மரியாதைக் குறைவு, தொழில் |
| மீனம் | மனோதைரியம், பாராட்டு, எடுத்த காரியம் கைகூடும், |

வளவன்





திருமறைக் கலாமன்றத்தில் நடைபெற்ற சட்டத்தரணி ரி.எம். அன்ரனிப்பிள்ளையின் "ஈஸி இங்கிலீஸ் வித் தமிழ்" எனும் நூல் வெளியீட்டு விழாவில் சென்பற்றிக்ஸ் கல்லூரி அதிபர் அருட்பணி ஜெறோம் அடிகள் உரையாற்றுவதையும் அருகில் நூலாசிரியர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 140 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 220 | 240 | 150 |
| தக்காளி | 70 | 80 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 25 | 30 | 40 |
| கோவா | 70 | 80 | 80 |
| கரட் | 60 | 70 | 100 |
| பூசணி | 40 | 50 | 40 |
| புடோல் | 80 | 100 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 120 | 140 | 120 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 140 |
| பாகற்காய் | 80 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 30 | 40 | 20 |
| கரணைக்கிழங்கு | 30 | 40 | 40 |
| பயிற்றங்காய் | 70 | 80 | 60 |
| லீக்ஸ் | 100 | 120 | 160 |
| பீற்றூட் | 70 | 80 | -- |
| கறிமிளகாய் | 140 | 160 | -- |
| முருங்கைக்காய் | 120 | 140 | 100 |
| போஞ்சி | -- | -- | 160 |
| கத்தரி தம்புள்ள | 100 | 120 | -- |
| கீரை - 1 பிடி | 35 | 40 | 25 |
| தேசிக்காய் | 120 | 140 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 40 | 35 |


# இலவசப் பாட நூல்கள் பகிர்ந்தளிக்கும் தேசிய நிகழ்வு








பாடசாலைகளுக்கு இலவச பாட நூல்கள் பகிர்ந்தளிக்கும் தேசிய நிகழ்வு நேற்று யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் நடை
பெற்றது. இந் நிகழ்வுக்கு முன்னதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த தலைமையிலான குழுவினரை அமைச்சர் டக்
ளஸ் தேவானந்தா பலாலி விமான நிலையத்திலிருந்து வரவேற்பதையும் நிகழ்வில் கலந்து கொண்ட விருந்தினர்கள் பாண்ட்
வாத்திய அணி வகுப்புடன் வேம்படி மகளிர் கல்லூரிக்கு அழைத்து வரப்படுவதையும் கல்வி அமைச்சர் தேசியக் கொடியையும்
வட மாகாணக் கொடியை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் வேம்படி மகளிர் கல்லூரிக் கொடியை அதிபர் திருமதி பொன்
னம்பலமும் ஏற்றுவதையும்,

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர்
நாயகம் சி.புஷ்பகுமார, ஊடக அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா ஆகியோர் உரையாற்றுவதையும்,

மாணவர்களுக்கான பாட நூல்களையும் ஆசிரியர்களுக்கான கையேடுகளையும் விருந்தினர்கள் வழங்குவதையும் நிகழ்
வில் கலந்து கொண்டவர்களையும் மாணவர்களின் இசை நிகழ்வுகளையும் படங்களில் காணலாம்.


Piyestra
&
DAMRO
புதிய முகவர் காட்சி அறை
யாழ் நகரில்
திறக்கப்பட்டுள்ளது
SUPER COOL FOAM
DOUBLE LAYER
SINGLE LAYER
சகல பியஸ்ரா மெத்தையுடனும் ஒரு டீபோ
இலவசம்
டிசம்பர் 31 வரை மட்டும் விசேட விலைக்கழிவு
ஜமுனா பர்னிசர்
181, நாவலர் வீதி, யாழ்ப்பாணம், 021 – 2221092
345, பிரதான வீதி, நெல்லியடி 021 – 2263970







தென்மராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி ஒன்றியத்தின் பொதுக்கூட்டத்தில் சாவகச்சேரி பிரதேச சபை செயலாளர், க.கனகசேஸ்வரன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும், ஒன்றியத்தலைவர் த.கந்தையா உரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

## கலைவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபை முன்பள்ளியின் கலை விழா இன்று வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா கலந்து சிறப்பிப்பதுடன் சிறப்பு விருந்தினர்களாக யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவ, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சீமான் விமலநாதன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து முன்பள்ளி சிறார்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ஓ-4-14-7)




## நீண்டகாலமாய் ஏதிலியாய் வாழும் எமக்கு விடிவுகாலம் வரும் நாள் எப்போ ?

### வலி வடக்கு மக்கள் விசனம்

(யாழ்ப்பாணம்)

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பினால் பாதிப்புறும் பகுதி மக்களின் ஒன்றியம் வலி வடக்கிலிருந்து நீண்டகாலமாக இடம் பெயர்ந்து வாழும் மக்கள் சார்பாக மீளக் குடியமர வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்துள்ளது.அதில் அவர்கள்தெரிவித்துள் ளதாவது,

பூர்வீகமாக வலி வடக்கில் இருந்து விவசாயம், மீன்பிடித் தொழில்,சிறுகைத்தொழில் என்பனவற்றோடு சீமெந்து ஆலைத் தொழிற்சாலை, பனிக்கட்டி தொழிற்சாலை போன்றவற்றில் தொழில் செய்தவர்கள் 20-25 வருடங்களாக இடம்பெயர்ந்து யாழ்.மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களின் நிலைதான் என்ன, எப்போ விடிவு வரும் என ஏங்கித் தவிக்கும் இம் மக்களின் வாழ்வாதாரம் தான் என்ன?

அங்கே பாதுகாப்பு வலயமாம் மீள்குடியேற்ற முடியாதாம், போர்தான் காரணம் என்றார்கள், பாதுகாப்பு என்றார்கள், போர்முடிந்து விட்டது என்கிறார்கள். ஆனால் மக்களோ நலன்புரி நிலையங்களிலும், வாடகைவீடுகளிலும் உறவினர் வீடுகளிலும் எத்தனை காலம் தான் இந்த அவல வாழ்க்கை. விரும்பிய உணவு உண்ணமுடியாது, நினைத்ததைச் செய்ய முடியாது, உணர்வுகள் வெளிப்படுத்த முடியாது, பெண் பிள்ளைகளைக் கரைசேர்க்க முடியாது, வீடுவேண்டும், காசுவேண்டும் என்ன செய்வது யாரிடம் முறையிடுவது, போர்முடிவடைந்து 6 மாதங்களுக்கு மேலாகியும் எம் உணர்வுகள் அடக்கி ஒடுக்கப்பட்டு சொந்த மண்ணிலே தமிழ் மக்கள் அகதிகள் என்ற நிலை.

இதனை வெளிப்படுத்த ஒடுக்கப்பட்ட நாங்கள் உலகறியச் செய்வோம், உலக மனித உரிமை மீறல் தினமாகிய இன்று வியாழக் கிழமை எங்களை எங்கள் மண்ணில் குடியமர விடுங்கள் என்று உறுதி பூணுவோம். அங்கே கட்டுநாயக்கா விமானத்தளம், இரத்மலானை விமானத்தளம், புத்தள விமானத்தளம் விமான ஓடுபாதை அருகே மக்கள் குடியிருக்கிறார்கள். இங்கே பலாலி விமானத்தளம் அருகில் ஏன் ஐயா மக்கள் குடியமர முடியாது தமிழ் மக்கள் என்பதற்காகவா? இடம்பெயர்ந்த அனைத்து மக்களும் மனித உரிமை தினமாகிய இன்று யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் மனித உரிமை மீறல்களுக்கு எதிரான கூட்டத்தில் பங்குகொண்டு ஊர்வலத்தின் மூலம் எங்கள் துன்பங்களை வெளிக்கொணர்ந்து எங்களை எங்கள் மண்ணில் குடியமர்த்துமாறு சர்வதேசத்திடம் தெரியப்படுத்தி முறையிட்டு எங்கள் மண்ணில் நாங்கள் குடி அமர்வோம். திரண்டு வாருங்கள் என ஒன்றியத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ஓ-2)

## சித்திரத் தேர் திருப்பணி சபை

புங்குடுதீவு இறுப்பிட்டி காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய புதிய சித்திரத் தேர் அமைப்பதற்கான புதிய நிர்வாக தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமை காளிகா பரமேஸ்வரி அம்பாள் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. இதில் தலைவராக க.வசந்தகுமார், செயலாளராக சி.மன்மராசா, பொருளாளராக ந.தவக்குமார் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (ஓ-126)

## செயலமர்வு

(அல்வாய்)

வடமராட்சி வலயப் பாடசாலைகளில் தரம் 6 முதல் 13 வரை சித்திரப்பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை நெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்விற்கு குறித்த பாட ஆசிரியர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஓ-4-19)

## அவரச கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமாதாரிகளிற்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு ஆரியகுளம் புதிய உயர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேலையற்ற உடற்கல்வி டிப்ளோமாதாரிகள் சங்கம் கேட்டுள்ளது. (ஓ)

## மோட்டார் வாகனங்கள் சாரதி அனுமதிப்பத்திரம் தொடர்பான ஆவணங்களுக்கு விண்ணப்பித்து கிடைக்கப்பெறாதோர் தமது முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தினூடாக வாகன உரிமை மாற்றம், முகவரி மாற்றம், இலக்கத் தகடு மாற்றம் போன்றவற்றுக்கும் சாரதி அனுமதிப்பத்திரம் புதுப்பித்தல் போன்றவற்றிற்கும் விண்ணப்பித்து நீண்டகாலமாக எதுவித பதிலும் கிடைக்கப் பெறாதவர்களுடைய ஆவணங்களை எதிர்வரும் பெப்ரவரி முதல் வாரத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ள நடமாடும் சேவையில் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பித்து நீண்டகாலமாகியும் ஆவணங்களைப் பெறாதவர்கள் விண்ணப்பித்தமைக்கு அத்தாட்சியாகவுள்ள ஆவணங்களுடன் எதிர்வரும்18 ஆம் திகதி இற்கு முன்னர் அலுவலக நேரத்தில் பிரதேச செயலக மோட்டார் போக்குவரத்துப் பிரிவில் தமது முறைப்பாடுகளை சமர்ப்பிக்கலாம் என்றும் விண்ணப்பத்தில் காணப்பட்ட குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி கொழும்பு மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திலிருந்து ஏதாவது கடிதங்கள் கிடைக்கப் பெற்றிருந்தால் அவற்றையும் தவறாது கொண்டு வருமாறும் பருத்தித்துறைப் பிரதேச செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ)

## இலவச பாடநூல்களை சிறப்பாக பேணிய மாணவர்களுக்கான சான்றிதழ் முதலாம் தவணை ஆரம்பத்தில்

(அல்வாய்)

கல்வி வெளியீட்டுத்திணைக்களத்தினால் வடமாகாணத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டிகளும் பாடசாலைகளில் பாடநூல்களை சிறப்பாகப் பயன்படுத்தும் மாணவர்களுக்கான சான்றிதழ்களும் சகல கல்விக் கோட்டங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இவற்றை பாடசாலை அதிபர்கள், கோட்டக்கல்வி அதிகாரிகளிடமிருந்து பெற்று உடனடியாக ஆசிரியர்களுக்கு அறிவுரைப்பு வழிகாட்டிகளாக வழங்கவேண்டுமென கல்வி வெளியீட்டுத்திணைக்கள ஆணையாளர் நாயகம் W.M.N.J. புஸ்பகுமார அறிவித்துள்ளார்.

மேலும் இலவசப் பாடநூல்களை சிறப்பாக பேணிய மாணவர்களுக்கான சான்றிதழ்களை 2010 இல் முதலாம் தவணை ஆரம்பமாகும்போது மாணவர் ஒன்றுகூடலின் போது மாணவர்களுக்கு வழங்கி கௌவரப்படுத்துமாறும் வேண்டப்பட்டுள்ளது. (ஓ-6-19)

## கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் புதிதாக மூன்று நோயாளர் தங்குவிடுதி திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் அம்புலன்ஸ் வாகனம் ஒன்றும் கையளிக்கப்பட்டுள்ளது.

வடக்கின் வசந்தம் வேலைத்திட்டத்தின் கீழ் யாழ்.கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் கடந்த திங்கட்கிழமை பாரிய மேம்பாட்டுத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன. இந்நிகழ்வில் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திஸ்ஸ கரலியத்த, வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி ஆகியோர் நேரில் சென்று அவற்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்தனர்.

17.6 மில்லியன் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட மூன்று நோயாளர் தங்கும் விடுதிகள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் நாடா வெட்டித் திறந்து வைக்கப்பட்டது. தொடர்ந்து முக்கிய நிகழ்வாக கைதடி சித்த போதனா வைத்தியசாலைக்கென வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் புதிதாக அம்புலன்ஸ் வாகனம் ஒன்று வழங்கப்பட்டது.

சித்த வைத்தியத்துறைக்கென யாழ்ப்பாணத்தில் ஓர் அம்புலன்ஸ் வாகனம் ஒன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருப்பது இதுவே முதல் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறி கருத்துத் தெரிவிக்கும்போது, யாழ்.சித்த மருத்துவத்துறையினரின் வேண்டுகோளை ஏற்று மூலிகைப் பயிர் வளர்ப்பதற்கென ஐந்து ஏக்கர் நிலம் வடமாகாண சபையினால் ஒதுக்கப்படுவதாக தெரிவித்தார். (ஓ-2)

## உடனுக்குடன் தீர்வு காணும் பொதுமக்கள் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகரசபையில் வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரையும் அலுவலக விடயமாக பொதுமக்கள் மாநகர முதல்வரைச் சந்திப்பதற்கான ஏற்பாடு தற்போது நடைமுறையில் உள்ளது.

இந் நடைமுறைக்குப் பதிலாக நடமாடும் சேவையை ஒத்த விதத்தில் மேற் குறிப்பிட்டவாறு வாரத்தின் ஒவ்வொரு புதன்கிழமையிலும் காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணி வரையும் மாநகர முதல்வரின் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வருடன் மாநகரசபையின் திணைக்களத் தலைவர்கள் மற்றும் பகுதித் தலைவர்கள் ஆகியோர் சமுகமாகவிருந்து பொது மக்களின் பிரச்சினைகளுக்கு இயன்றளவு உடனுக்குடன் தீர்வுகாணும் நடைமுறை எதிர்வரும் 23 ஆம் திகதி புதன்கிழமை முதல் அமுல்படுத்தப்படவுள்ளது.

இவ்வேற்பாட்டிற்கமைவாக பொது மக்கள் தங்களது பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ஓ)

# விடுமுறை நாட்களில் விசேட வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்து யாழ். கல்வி வலயப் பாடசாலைகளில் இணைந்துள்ள தரம் 1 தொடக்கம் 5 வரையான மாணவர்களில் எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களுக்கான விசேட வகுப்புக்களை விடுமுறைக்காலங்களில் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இதன் பொருட்டு தேவையுடைய மாணவர்களின் பெயர் விபரங்களை எதிர் வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் பாடசாலை அதிபர்கள் யாழ். கல்வி வலயத்திற்கு அனுப்பி வைக்குமாறு யாழ். வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் கேட்டுக்கொள்கின்றார். (ஓ-7-14)

# இன்ஃப்ளுவென்சா நோயினால் மேலும் இருவர் மரணம்

(கொழும்பு)

நொவெல் இன் ஃப்ளுவென்சா எனப்படும் ஏ எச்1 என்1 வைரசுக்கு மேலும் இரு சிறுவர்கள் பலியாகியுள்ளனர்.

பிபிலை, ஹசலக்க ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 8 வயது ,9 வயதுடைய இரண்டு சிறுவர்களே இந்த நோயால் மஹியங்கனை வைத்தியசாலையில் மரணமானார்கள்.

இவர்கள் நொவெல் இன் ஃப்ளு வென்சா நோயினால் இறந்தமை நேற்று முன்தினம் உறுதி செய்யப்பட்டது.

இவ்விரு சிறுவர்களுடன் சேர்த்து இலங்கையில் இந்த நோயினால் இறந்தவர்களின் எண்ணிக்கை 21 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை இந்நோய்த் தொற்றுக்குள்ளான 400க்கும் அதிகமானோர் இனங்காணப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு கூறுகிறது.

ஆனால் இவர்களைத் தவிர இனங்காணப்படாத மேலும் பல நோயாளர்கள் இருக்கக்கூடுமென அமைச்சு எச்சரிக்கிறது.

இதன் பிரகாரம் இந்த நோயால் பீடிக்கப்பட்டவர்களுக்கு விரிவான சிகிச்சையளிக்கும் பொருட்டு நேற்று முன்தினம் ஐ.டி.எச். வைத்தியசாலையில் தீவிர கண்காணிப்புப் பிரிவொன்று திறந்து வைக்கப்பட்டதாக சுகாதார அமைச்சின் பொதுச் சுகாதாரப் பிரிவுப் பிரதிப் பணிப்பாளர் நாயகம் டாக்டர் பாலித மஹிபால தெரிவித்தார். (6-2)

# ஆசிரியர்களுக்கான செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி பாடசாலைகளில் 2010 இல் தரம் 9 இற்கு ஆங்கில பாடம் (புதிய பாடத்திட்டம்) கற்பிக்கவுள்ள ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வியாழக்கிழமை காலை 8 மணிக்கு வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்விற்கு குறித்த பாட ஆசிரியர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு வலயக் கல்விப்பணிப்பாளர் கு.பிறேமகாந்தன் தெரிவித்துள்ளார். (ஓ-4-29)

# ஆசிரிய வாண்மை விருத்தி நிகழ்ச்சித்திட்ட செயலமர்வுகள்

வடமராட்சி வலய ஆசிரிய நிலையத்தில், உதவி ஆசிரியர்களுக்கான ஆசிரிய வாண்மை விருத்தி நிகழ்ச்சித் திட்ட செயலமர்வுகள் நாளை வெள்ளிக்கிழமையிலிருந்து 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை 5 நாட்கள் நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுக்கு புதிதாக நியமனம் பெற்ற சகல உதவி ஆசிரியர்களையும் தவறாது பங்குபற்றுமாறு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஓ)

# குடாநாட்டில் பச்சை மிளகாய் விலை மூன்று மடங்காக அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு சந்தையில் பச்சை மிளகாயின் விலையில் திடீர் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில வாரங்களாக எழுபது ரூபா முதல் நூறு ரூபாவரை யாழ்ப்பாணம் திருநெல்வேலி, மருதனார் மடம், சாவகச்சேரி சந்தைகளில் விற்பனை செய்யப் பட்டு வந்த பச்சை மிளகாய் கடந்த இரு நாட் களாக 220 முதல் 250 ரூபாவரை விற்பனை செய்யப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் கடுமையாகப் பெய்த மழையை அடுத்து பச்சைமிளகாய் உற்பத்தி வீழ்ச்சியடைந்ததை அடுத்தே இவ்விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

தம்புள்ளை உள்ளிட்ட நாட்டின் பிற பிரதேசங்களிலும் பச்சை மிளகாயின் விலை அதிகரித்துள்ளதால் பிற மாவட்டங்களிலிருந்தும் யாழ்ப்பாணத்திற்கு பச்சைமிளகாய் இறக்குமதி செய்யப்படாத நிலையில் இன்னும் சில வாரங்கள் வரை பச்சை மிளகாயின் விலை குறைவடைவதற்கான வாய்ப்பு இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுகிறது. (ஓ-14)

# யாழ்ப்பாணத்தில் மூலிகை ஆராய்ச்சி நிலையமும் சித்தமருத்துவ அருங்காட்சியகமும் நிறுவவேண்டும்

## டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் அமைச்சரிடம் வேண்டுகோள்

பண்பாட்டு வளர்ச்சியும் அறிவியல் வளர்ச்சியும் இணைந்த மூலிகை மருத்துவமானது வளர்ச்சியடைய யாழ்ப்பாணத்தில் மூலிகை ஆராய்ச்சி நிலையம் அமைக்கப் பட வேண்டும் என்று ஆயுள்வேத பாதுகாப்புச் சபை செயலாளரும் எழுத்தாளருமான டாக்டர் வெற்றிவேல் சக்திவேல் சிறப்புரையாற்றும் போது சுதேச மருத்துவ அமைச்சர் திஸ்ஸ கரலியத்தவிடம் வேண்டு கோள் விடுத்தார்.

மேலும் எமது நாட்டின் புராதன விஞ்ஞானமான மூலிகை மருத்துவத்தை ஆவணப்படுத்தும் முகமாக சித்த மருத்துவ அருங்கலை காட்சியகத்தை நிறுவுவதோடு, சர்வதேச மூலிகை மாநாடுகள், மூலிகை மருத்துவ ஆராய்ச்சி நூலகம் ஆகியவற்றை யாழ்ப்பாணத்தில் நிறுவவேண்டும் என்றும் டாக்டர் வெ..சக்திவேல் வேண்டுகோள் விடுத்தபோது சுதேச மருத்துவ அமைச்சர் அதனை ஏற்றுக் கொண்டதுடன் பாடசாலை மாணவர்களுக்கு மூலிகை மருத்துவ விடயங்களை அறிமுகப் படுத்துவதுடன் விவசாயிகளுக்கு மூலிகை மருத்துவப் பயன்பாட்டை விரிவுபடுத்துவதாகவும் குறிப்பிட்டார். சித்தமருத்துவம் முன்னேற நடவடிக்கை எடுப்பதாக ஆயுள்வேத ஆணையாளர் திருமதி ரமணி குணவர்த்தனா குறிப்பிட்டார்.

முறிவு சிகிச்சை விசேட மருத்துவர் டாக்டர் சி. சுப்பையா தலைமையில் இம் மாதம் 5ஆம்திகதி நடைபெற்ற வைத்திய இல்ல அடிக்கல் நாட்டுவிழாவில் சுதேச மருத் துவ அமைச்சர் கௌரவ திஸ்ஸ கரலியத்த தெல்லிபழையில் அடிக்கல்லை நாட்டினார். டாக்டர் சி.சுப்பையா உரையாற்றும் போது ஆங்கில மோகத்தால் தமிழர் வளர்ச்சியில் சில பின்னடைவுகள் ஏற்பட்டதாகக் கூறினார். (ஓ-17)

# விநாயகர் சஷ்டித் திருவிழா

(இருபாலை)

குப்பிழான் கற்கரைக் கற்பக விநாயகர் திருக்கோயில் விநாயகர் சஷ்டித் திருவிழா இம் மாதம் 2ஆம் திகதி முதல் ஆரம்பமாகி 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரையான 21 தினங்கள் சிறப்பான அபிஷேக ஆராதனைகளும் திருவிழாவும் நடைபெறவுள்ளன.

கயமுகசூரசங்காரமும் இறுதி நாளான 22ஆம் திகதி அன்று மகாகணபதி ஹோமமும் 108 கலச அபிஷேகமும் இடம் பெறும். அதனைத் தொடர்ந்து 23ஆம் திகதி முதல் ஜனவரி 1ஆம் திகதி வரை திருவெம்பாவைப் பூஜை நடைபெறவுள்ளது. (ஓ-136)

# புதுமாத்தளனுக்கு ஜனாதிபதி விஜயம்

(கொழும்பு)

இவ்வருடம் மே மாதம் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் இறுதிச் சமர் நடைபெற்ற புது மாத்தளன் பிரதேசத்துக்கு நேற்று காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விஜயமொன்றை மேற்கொண்டார்.

இவ் விஜயத்தின் போது படையினர் நினைவாக அங்கு அமைக்கப்பட்டுள்ள நினைவுச் சின்னத்தை ஜனாதிபதி திறந்து வைத்தார்.

படையினர் பெருமையை என்றும் பறைசாற்றும் வண்ணம் இந்த நினைவுச் சின்னம் அமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6-2)

# புதிய பாடத்திட்ட மறுசீரமைப்பு தொடர்பில் தேசிய ரீதியான ஆய்வு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கு மாகாணம் உட் பட நாட்டின் பாடசாலைக் கல்விக் கட்டமைப்பில் புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள பாடத்திட்ட மறு சீரமைப்புக்கள் தொடர்பாக தேசிய ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

புதிய பாடத்திட்ட அமுலாக்கத் தில் காணப் படும் சிறப்பம்சங்களையும் குறைபாடுகளையும் அடையாளம் கண்டு எதிர்காலத்தில் அவற்றை நிவர்த்தி செய்து கொள்ளும் நோக் கத்துடன் தேசிய கல்வி நிறுவகத் தின் ஆராச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவு இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

புதிய கற்றல், கற்பித்தல் நுட்பங்களை அமுல்படுத்தும் போது வகுப்பறையில் ஏற்படும் பிரச்சி னைகளை அடையாளம் கண்டு உரிய தீர்வினை பெற்றுக் கொடுப் பது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. (ஓ-6)

# பொன்சேகாவின் உரிமை மீறல் மனுவிற்கு இடையீட்டு மனுத்தாக்கல்

(கொழும்பு)

தனக்குக் கடுமையான பாதுகாப்பை வழங் குமாறு உத்தரவொன்றைப் பிறப்பிக்குமாறு கோரி பாதுகாப்பு படைகளின் முன்னாள் பிரதானியான ஜெனரல் சரத் பொன்சேகா உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள அடிப்படை உரிமை மீறல் மனுவிற்கு இடையீட்டு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

றுகுணு பிக்கு முன்னணியே இந்த இடையீட்டு மனுவை கடந்த திங்கட்கிழமை தாக்கல் செய்துள்ளது. முன்னாள் இராணுவத் தளபதியின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த இடையீட்டு மனுவில் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு வழங்க வேண்டிய பாதுகாப்பை மட்டுமே வழங்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் கடுமையான பாதுகாப்பை வழங்குமாறு உத்தரவொன்றைப் பிறப்பிக்க கோரி முன்னாள் பாதுகாப்புப் படைகளின் பிரதானியான ஜெனரல் சரத் பொன்சேகா கடந்த மாதம் 24ஆம் திகதி அடிப்படை மனித உரிமை மீறல் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

மனு மீதான விசாரணை உயர்நீதிமன்றப் பிரதம நீதியரசர் அசோக என் சில்வா தலைமையிலான நீதியரசர்களான காமினி அமரதுங்க பி.ஏ.ரத்நாயக்க முன்னிலையில் கடந்த 2 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதியரசர்கள் குழு சரத் பொன் சேகாவிற்கு வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு தொடர்பிலான இரகசிய அறிக்கையை நாளை வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது.

உயர் நீதிமன்றத்தில் கடந்த 2ஆம் திகதி மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட வேளையில் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தில் அங்கம் வகிக்கும் றுகுணு பிக்கு முன்னணியைச் சேர்ந்த குமாரகே காஸபர் தேரர் இடையீட்டு மனுவொன்றைத் தாக்கல் செய்வதற்கான அனுமதியை நீதியரசர்கள் குழாமிடம் கோரி நின்றார். அதற்கு இடமளிக்காத பிரதமர் நீதியரசர் தலைமையிலான குழு இடையீட்டு மனுவைத் தாக்கல் செய்வதற்கான முறையொன்று இருப்பதாகவும் அதன் அடிப்படையில் மனுவைத் தாக்கல் செய்யுமாறும் அறிவுரை வழங்கியது. (ஓ-6)

# புலிகளின் சொத்துக்கள் குறித்த விசாரணைகள் முடிந்ததும் தகவல்கள் வெளியிடப்படும்

## பாராளுமன்றத்தில் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

புலிகளின் சொத்துக்கள் தொடர்பில் தற்போது புலனாய்வுகள் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் விசாரணைகள் முடிவடைந்ததும் தகவல்கள் பாராளுமன்றத்தில் வெளியிடப்படுமென்றும் பிரதமர் தெரிவித்தார்.

இதன் பிரகாரம் வெளிநாடுகளில் புலிகள் இயக்கத்தின் பெயரில் உள்ள சொத்துக்களைப் பொறுப்பேற்று அவற்றை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகப் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவ்வேளையில் கடந்த மே மாதம் 18 ஆம் திகதி புலிகள் இயக்கம் முற்றாகத் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் அந்த இயக்கத்தின் தங்கம் உள்ளிட்ட பெருமளவு சொத்துக்கள் கைப்பற்றப்பட்டதாகவும் அவை தொடர்பான தற்போதைய நிலவரம் யாதென்றும் எதிர்க்கட்சியின் பிரதம கொறடா ஜோசப் மைக்கல் பெரேரா சபையில் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தங்கம் உள்ளிட்ட சொத்துகள் குறித்து புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றதாகவும் தற்போது கைது செய்யப்பட்டுள்ள கே.பி. மூலம் புலிகள் இயக்கத்தின் வெளிநாட்டுச் சொத்துகள் தொடர்பான விபரங்கள் வெளியாகியுள்ளதாகவும் அவர்களுக்குச் சொந்தமான பல கப்பல்களில் சிலவற்றைக் கடற்படையினர் அழித்துள்ளதாகவும் குறிப்பிட்ட அவர் இது தொடர்பான தகவல்கள் பின்னர் வெளியிடப்படும் என்று தெரிவித்தார். (6-2)

# பிறந்த எண் பலன்களும் அதிர்ஷ்ட பெயர்களும்

## உடல் எண் : 5

5, 14, 23 ஆகிய திகதி ஒன்றில் பிறந்தவராக இருப்பின் அவர் பிறந்த எண் 5 என்று அறிவோம்.

## உடல் எண் : 5 விதி எண் : 1

### உடலமைப்பு

பிறந்த எண் 5, விதி எண் 1 ஆகக் கொண்டவர்கள் புதன், சூரியன் இருவரின் கூட்டு ஆதிக்கத்திற குட்பட் வர்கள். இவர்கள் சற்று உயரமாகவும் கவர்ச்சிகரமான தோற்றத்துடனும் காட்சி ளிப்பர்.

### மன, குணவியல்பு

இவர்கள் அறிவு ஆற்றல் மிக்கவராகவும், புதிய சிந்தனை, புதிய முயற்சிகளில் ஈடுபடக் கூடியவர்களாகவும் இருப்பர். எப்போதும் சுறுசுறுப்புடன் ஏதாவதொரு வேலை செய்து கொண்டே இருப்பர். எந்த ஒரு வேலையையும் சீக்கிரமாகச் செய்து முடித்துவிட வேண்டுமென்ற எண்ணமுடையவர்கள்.

தன்னம்பிக்கையுடன் விடாமுயற்சியுடையவர்களாகவும் இருப்பர். எந்தவொரு காரியத்தையும் முழு கவனத்துடன் செய்வர். காரியம் முடியும் வரை ஊண் உறக்கத்தைப் பற்றிக்கூட நினைக்கமாட்டார்கள்.

நீதி, நேர்மைக்குக் கட்டுப்பட்டவர்களாக இருப்பர். எப்போதும் நியாயத்திற்குப் புறம்பான செயல் புரியமாட்டார்கள். தம் சொந்த முயற்சியால் வாழ்க்கையில் முன்னேற எண்ணுவர்.

இவர்கள் மற்றவரிடம் பேசும் போது கூச்சப்படும் சுபாவம் இயற்கையிலேயே இருக்கும். இவர்கள் கலாரசிகர்களாகவும், இயற்கைக் காட்சிகளை ரசித்து அனுபவிக்க வல்லவர்களாகவும் இருப்பர்.

இவர்கள் பொறுமைசாலி போலக் காணப்பட்டாலும், பெருமளவு கோபத்திற்கு ஆளாவர்.

இவர்களிடம் ஈவு, இரக்கம், பிறருக்கு உதவும் தாராள குணம் இருக்கும். பிறரின் வறுமையைப் போக்க முயற்சி செய்வர். ஏழைக் குழந்தைகளின் முன்னேற்றத்திற்கு பாடுபட மனமுவந்து முன்வருவர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு நல்ல மனமும், குணமும் உள்ள வாழ்க்கைத் துணை அமையும். புத்திர பாக்கியத்திற்கு குறைவு இருக்காது. குடும்பத்தில் சந்தோஷம், அமைதி நிலவும். உற்றார் உறவினர்களிடம் சுமூக உறவு இருக்கும்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் இரும்பு சம்பந்தப்பட்ட எந்திர சாமான்கள் ,வண்டி ,வாகனங்கள் போன்ற அனைத்து தொழில்களிலும் ஈடுபட்டிருப்பர். நெருப்பும் இவர்கள் தொழிலுக்கு துணை புரிபவையாக இருக்கும். இவை தவிர இவர்கள் இரும்பு இயந்திர சாமான்களை விற்பனை செய்யும் ஏஜெண்டுகளாகவும் இருக்கக்கூடும். இவர்களுக்கு முன்னோர் சொத்து இருந்தாலும் அதைக் கொண்டு தம் வாழ்க்கையை அமைத்துக் கொள்ள விரும்பமாட்டார்கள். தம் முயற்சியால் பொருள் சம்பாதித்து படிப்படியாக வாழ்க்கையில் முன்னேறக்கூடியவர்களாக இருப்பர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ணம் தொடர்பான காய்ச்சல், இரத்தக் கொதிப்பு, மூலம், வயிற்று வலி போன்ற நோய்கள் வரக்கூடும். அது தவிர இவர்களுக்கு நரம்புத் தளர்ச்சியும் அது தொடர்பான நோய்களும் ஏற்படும்.

மதுமேகம் என்னும் சர்க்கரை வியாதியும் இவர்களுக்கு ஏற்படலாம்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன், சூரியன் ஆதிக்கம் பெற்ற 5,1 தொடர்பிலான எண்களில் யோகப் பலனளிக்கவல்ல எண் ஒன்றில் தம் பெயரை அமைத்துக் கொள்ள சிறப்பாகும்.

தம் நிறுவனங்களுக்குப் பெயர் வைப்பதாக இருந்தாலும் 5,1 தொடர்பான எண்களே யோகமானவை. இவர்களுக்கு 5,1 யோகமான எண்கள், அத்துடன் இவை தொடர்புடைய திகதிகளோடு 6 தொடர்புடைய திகதிகளும் அதிர்ஷ்டமானவையாகும்.

இவர்களுக்குப் பாதகமான எண்களோ திகதிகளோ இல்லையென்று கூறினாலும் இவர்கள் சாதகமான எண்களையும் திகதிகளையும் உபயோகிப்பது நன்று.

## உடல் எண் : 5 விதி எண் : 2

### உடலமைப்பு

பிறந்த எண் 5 விதி எண் 2 ஆகக் கொண்டவர்கள் புதன், சந்திரன் ஆகியோரின் கூட்டு ஆதிக்கத்திற்குட்பட்டவர்கள். இவர்கள் சற்று குள்ளமான தோற்றம் உள்ளவர்களாக இருப்பர். இவர்களின் பற்கள் வரிசையாகவும், பார்ப்பதற்கு கவர்ச்சியாகவும் இருக்கும். இவர்களின் தோற்றம் பிறரைக் கவரும் வண்ணம் இருக்கும்.

### மன, குணவியல்பு

இவர்கள் முன் எச்சரிக்கையானவர்கள். பிறரை எளிதில் நம்பமாட்டார்கள். எதையும் தானே செய்வதில் திருப்தியடைவர். இவர்களிடம் பிடிவாத குணம் அளவுக்கு மீறி இருக்கும். எதையும் வேகமாகச் செய்ய வேண்டுமென்று துடிப்புள்ளவர்கள். வெற்றியடைந்தால் பெருமையும், மகிழ்ச்சியும் கொள்வர். தோல்வியடைந்துவிட்டால் அதற்கு பிறர்தான் காரணம் என்று எறிந்து விழுவர். தன்னுடைய தோல்விக்கும், ஏமாற்றத்திற்கும் தாம் பொறுப்பில்லையென்றும், தம் குடும்பத்தாரே காரணம் என்றும் அவர்கள் மீது பாய்வர்.

இவர்கள் உடல் பலம் உள்ளவர்கள். ஆனால் மனபலம் கொஞ்சமும் இல்லாதவர்கள். அடிக்கடி சலனங்களுக்கு உள்ளாவர். ஒருசமயம் மகிழ்ச்சியாகக் காணப்பட்டாலும் மறுசமயம் வேதனையால் துவண்டிருப்பர். அதற்கான வலுவான காரணம் இருக்காது.

தன் மனக் கொந்தளிப்பை ஆத்திரத்துடன் பிறரிடம் வெளியிடும் சுபாவம் இவர்களிடம் இயல்பாகவே இருக்கும்.

இவர்கள் ஆடம்பரப் பிரியர்களாக இருப்பர். ஆடம்பரப் பொருட்களை அதிக விலை கொடுத்து வாங்கியும் தன் வீட்டை அழகுபடுத்துவதிலும் அதிகக் கவனம் செலுத்துவர்.

இவர்களிடம் கற்பனை ஆற்றல் அதிகம் காணப்படும். எதையும் ரசிக்கும் ஆற்றல் இவர்களிடம் உண்டு. இவர்கள் புதுமை விரும்பிகளாக இருக்கும் அதே நேரத்தில் பழமையையும் போற்றிக் காப்பவர்களாக இருப்பர்.

இவர்கள் பேச்சால் பிறரை எளிதில் கவரக்கூடியவர்களாக இருப்பர்.

### குடும்ப வாழ்க்கை

இவர்களுக்கு வாழ்க்கைத்துணை நல்ல குணமுள்ளவராக அமைவர். ஆனால் இவர்களின் போக்கு குடும்பத்தில் அடிக்கடி கொந்தளிப்பை உண்டாக்குவதாக இருக்கும். அதனால் குடும்பத்தில் போராட்டங்களும், ஓரளவு அமைதியின்மையும் நிலவும்.

### தொழிலும் வருமானமும்

இவர்கள் கலா ரசிகர்களாகவும், எழுதுவதிலும், பேசுவதிலும் வல்லவர்களாகவும் இருப்பர். அது தொடர்பான கலைத்துறையில் பொருள் சம்பாதிக்கக்கூடும். இவர்கள் இரும்பு சம்பந்தமான தொழிலில் ஈடுபடுவர். மற்றும் அழகு சாதனங்கள், ஆடம்பரப் பொருட்கள் போன்றவற்றை விற்பவராகவோ, அது தொடர்பான துறையில் பணிபுரிபவராகவோ இருப்பர். கமிஷன் ஏஜெண்டுகளாகவும் இருக்கலாம்.

மின்சாரக் கருவிகளான தொழில்களும் இவர்களுக்கு ஏற்றதே. அத்துடன் சமயம், சட்டம், மருத்துவத்துறையிலும் ஈடுபாடு கொண்டிருப்பர். இவர்கள் தம் வாழ்க்கையில் பொருள் சம்பாதித்து ஓர் உன்னத நிலை அடையும் வாய்ப்புப் பெறுவர்.

### ஆரோக்கிய நிலை

இவர்களுக்கு உஷ்ணம் சம்பந்தமான நோய்களோடு நுரையீரல் பாதிப்பு, இருமல், சளி போன்ற தொல்லைகளுக்கு ஆளாகவும் கூடும். அடிக்கடி சளி பிடித்து அவதிக்குள்ளாவர். காச நோய்க்கு ஆளாகவும் கூடும்.

### சாதக பாதக எண்களும் திகதியும்

இவர்கள் புதன் ஆதிக்கம் பெற்ற 5 அது தொடர்பிலான எண்களில் யோக பலனளிக்க வல்ல கூட்டு எண்ணில் பெயர் வருமாறு அமைத்துக் கொள்ளலாம்.

இவர்கள் நிறுவனங்களுக்கு 5 தொடர்பான பெயர்களே யோகமானது. இவர்களுக்கு 5 தொடர்பிலான எண்கள் யோகமானவை. இது தொடர்பில் திகதிகளும் நன்மை அளிப்பவை. ஆனால் செவ்வாய் தொடர்பிலான 9 ஆம் அது தொடர்பிலான எண்களும் திகதிகளும் யோகமற்றவை. (தொடரும்)



யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் நல்லூர் கோட்டக் கல்விப் பணிப்பாளர் சி. மாணிக்கராஜா, நல்லூர் பிரதேச செயலாளர் பா. செந்தில்நந்தனன் யாழ். இந்துக் கல்லூரி அதிபர் வீ. கணேசராஜா, யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் வி. ஞானகாந்தன் ஆகியோர் மங்கல விளக்கேற்றுவதையும், வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வி. இராசையா உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# விஜயநகரப் பேரரசுக் கால சமய நூல்கள் (கி.பி.1100-1700)

74

அருஞ்சொல் ஒன்றும் இல்லாமல் பலர்க்கும் தெரிந்த எளிய சொற்களாலேயே ஒரு சிறு காட்சியை-எல்லோரும் நாளும் கண்டு வரும் சாதாரண காட்சியை - நயமாகக் கூறுகிறார். ஒரு சிறு மரத்தின் கொம்பில் உள்ள பூக்களைப் பறிப்பதற்காகப் பெண்கள் அந்தக் கொம்பை வளைக்கிறார்களாம். வளைக்கிறார்கள் என்றும் கூறவில்லை; தொடுகிறார்கள் என்று கூறுகிறார். பெண்களின் கை தீண்டியவுடன் அந்தக் கொம்பு வளைந்து அவர்களின் காலில் சாய்ந்து வணங்குகிறதாம். பெண்களின் கை தீண்டினால் வணங்காதவர்கள் யார் என்று குறிப்பிடுகிறார்.

*பாவையர்கை தீண்டப் பணியாதார்*
*யாவரே*
*பூவையர்கை தீண்டலும்அப் பூங்கொம்பு*
*-மேவிஅவர்*
*பொன்னடியில் தாழ்ந்தனவே பூங்குழலாய்*
*காண்என்றான்*
*மின்நெடுவேல் கையான் விரைந்து.*

இவ்வாறு பல பாடல்களில் கதையை ஆனாலும், வர்ணனையே ஆனாலும், எளிய நடையில் நயமாகச் சொல்லும் திறன் மிக்கவர் புகழேந்தி.

புகழேந்தி சோழனால் சிறையில் அடைக்கப்பட்ட காலத்தில், சிறை வழியாக நீர் கொண்டு வரச் செல்லும் பெண்கள் மனம் மகிழும் படியாகச் சில நூல்களை எளிய நடையில் பாடி அவர்களின் உதவியைப் பெற்றார் என்று ஒரு கதை சொல்லும். அவ்வாறு அவர் பாடிய நூல்கள் பவளக்கொடி மாலை, அல்லியரசாணிமாலை, புலந்திரன் தூது, ஏணியேற்றம், பஞ்சபாண்டவர் வனவாசம் முதலியன.

இவற்றுள் பெரும்பாலானவை பாரதத்தில் உள்ள கதைகளின் தொடர்பானவை; அல்லது அவற்றை ஒட்டி நாட்டு மக்களிடையே வழங்கிவந்த கதைகளை விளக்கியவை; பவளக்கொடி மாலை முதலியவை எளிய நடையில் அமைந்தவை. கொச்சைத் தமிழ் கலந்தவை. படித்தவுடன் பொருள் விளங்குபவை. அவற்றை ஒருவர் படிக்க, பலர்கூடிக் கேட்டு மகிழும் வழக்கம் கிராமங்களில் உண்டு. நாட்டுப்பாடல்கள் போலவே கற்பனை வளமும் உள்ளத்தைத் தொடும் சிறப்பும் உடையவை. நளவெண்பாவைப் பாடிய புலவர் வேறு என்பதும், பவளக்கொடிமாலை முதலியவை பிற்காலத்தில் நாட்டுப்பாடல்களின் முறையில் வேறொரு புலவர் இயற்றியிருக்கவேண்டும் என்பதும் அறிஞர் கருத்தாகும். பதினான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்தியின் பெயரைப் பிற்காலத்தார் பயன்படுத்திச் சில எளியபதைப் பாடல்களை எழுதிப் பரப்பினார்கள் என்பதே உண்மை. புகழ்பெற்ற புலவர் ஒருவரின் பெயரைப் பிற்காலத்தார் பயன்படுத்திக் கொள்வது உண்டுஎன்பதற்கு ஔவையார், கபிலர், அகத்தியர், திருவள்ளுவர் முதலானவர்களின் பெயரால் பிற்காலத்தில் இயற்றப்பட்ட நூல்கள் சான்றாக உள்ளன. புகழேந்தியின் பெயரால் நிலவும் கதைப் பாடல்கள் பலவும் அப்படிப்பட்டவைகளே.

## கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடந்த ஆய்வரங்கச் சிறப்புரைகள் - 2009

### அதிவீரராமர் முதலானோர்

பாண்டியர் மரபைச் சார்ந்த அதி வீரராம பாண்டியர் பதினாறாம் நூற்றாண்டில் தென் காசியிலிருந்த சில பகுதிகளை ஆட்சிபுரிந்தார். அவர் தமிழ்ப்புலமை நிரம்பியவர்; அவருடைய ஆட்சி அவருக்குத் தந்த புகழ் சிறிது; அவர் இயற்றிய நூல்களே இன்று அவருடைய பெயரை விளக்கி நிற்கின்றன. அவர் இயற்றிய புராணங்கள் சில. காசிக் காண்டம் 2525 செய்யுளில் காசியின் பெருமையைக் கூறுவது. அவற்றை விட நைடதம் என்னும் காப்பியமே பலராலும் போற்றப்படுவது. அது நிஷத நாட்டை ஆண்ட நளன் என்னும் அரசனுடைய வாழ்வை விளக்குவது. பாரதத்தில் ஒரு பகுதியாக உள்ள கதையை விருத்தம் என்னும் செய்யுள் வடிவால் கூறுவது. தொடக்கத்தில் கதை விரிவாகக் கூறப்பட்டு வந்து, பிற்பகுதியில் சுருக்கமாக அமைந்து விரைவில் முடிக்கப்படுகிறது. அதி வீரராமருடைய தேவியாகிய அரசி தம் கணவரின் நூலில் அந்தக் குறை இருப்பதைச் சுட்டிக் காட்டினாராம். நல்ல நடையில் அமைந்திருந்த போதிலும், ஆசிரியர்க்கு காமச்சுவையில் மிகுந்த ஈடுபாடு மிகுந்து விளங்குவது போல் மற்றச் சுவைகளில் இல்லை. நூலின் சிறப்புக்கு அது குறை ஆகிறது. அவர் ஒரு நீதிநூலும் இயற்றியுள்ளார். அது வெற்றி வேற்கை அல்லது குறுந் தொகை எனப்படும். ஔவையாரின் ஆத்தி சூடிபோல் அது ஒரு காலத்தில் போற்றிக் கற்கப்பட்டு வந்தது. நீதிகளை எளிய முறையில் நேராக எடுத்துரைக்கும் போக்கை அதில் காணலாம். (இலக்கியம் இயற்ற வல்ல புலவர்கள் நீதிநூலும் இயற்ற விரும்புதல் அந்தக் காலத்து வழக்கமாக இருந்தது போல் தெரிகிறது. அதனால் தான் குமர குருபரர் ஒரு நீதி நூலும், சிவப்பிரகாசர் மற்றொரு நீதிநூலும் இயற்றினார்கள்.)


அவருடைய தமையனார் வரதுங்கராம பாண்டியர் என்பவரும்புலமை நிரம்பியவரே. பிரமோத்தர காண்டம் என்னும் சைவநூலை இயற்றியவர் அவர். பக்திப் பாடல்களாக அவர் இயற்றிய நூல் திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி என்பது. உருக்கமான பக்தியுணர்ச்சியை அந்தப் பாடல்களில் காணலாம். அதனால் அது குட்டித் திருவாசகம் என்று ஒரு காலத்தில் போற்றப்பட்டு வந்தது. அதில் உள்ள ஒருபாடல் வருமாறு:

*சிந்தனை உனக்குத் தந்தேன்*
*திருவருள் எனக்குத் தந்தாய்*
*வந்தனை உனக்குத் தந்தேன்*
*மலரடி எனக்குத் தந்தாய்*
*பைந்துணர் உனக்குத் தந்தேன்*
*பரகதி எனக்குத் தந்தாய்*
*கந்தனைப் பயந்த நாதா*
*கருவையில் இருக்கும் தேவே.*

**பேராசிரியர் மு.வரதராசன்**

மச்சபுராணத்தை வடமொழியிலிருந்து தழுவி எழுதியவர் வடமலைப்பிள்ளையப்பன் என்பவர். அவர் புலவர்க்கு உதவும் செல்வராகவும் வாழ்ந்தவர். அவருடைய உதவி கள் பெற்ற இரத்தினக்கவிராயர் என்பவர், புலவர் ஆற்றுப்படை என்னும் நூல் இயற்றினார். அதன் வாயிலாக, புலவர்களுக்கு அந்த வள்ளலின் கொடைப்பண்பை அறிமுகப் படுத்தினார்.

(தொடரும்)



சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரியின் நிறுவுநர் தினமும் பரிசளிப்புவிழாவும் நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்று அழைத்துவரப்படுவதையும், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் மங்கல விளக்கேற்றுவதையும், அதிபர் வ.ஸ்ரீகாந்தன் தலைமையுரையாற்றுவதையும், தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் பா.தனபாலன் நிறுவுநர் நினைவுப் பேருரையாற்றுவதையும் படங்களில் காணலாம்.

# உல்லாச சுற்றுலாத் தலமாக மாறும் சாட்டிக் கடற்கரை

(யாழ்ப்பாணம்)

வடக்கின் வசந்தம் வேலைத் திட்டத்தின் கீழ் உல்லாசப் பயண சுற்றுலாத்தலமாக வேலணை சாட்டி கடற்கரை அபிவிருத்தி செய்யப்பட்டு வருகிறது.

தற்போது கடற்கரைப்பகுதி சுத்தம் செய்யப்பட்டு அதன் சுற்றாடல் தூய்மைப்படுத்தப்படும் நடவடிக்கைகள் இடம்பெற்று வருகின்றன.

இந்நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சாட்டிக் கடற்கரைக்கு விஜயம்மேற்கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் அங்கு மேற்கொள்ளப்படும் துப்புரவாக்கல் மற்றும் மேம்பாட்டுப் பணிகளைப் பார்வையிட்டனர்.

சாட்டி கடற்கரை மேம்பாட்டின் அடுத்த கட்டமாக அங்கு சுற்றுலாப் பயணிகளின் வசதி கருதி கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தல், உணவகம் மற்றும் சிற்றுண்டிச்சாலை என்பனவற்றை ஆரம்பித்தல், நிழற்குடைகள் பலவற்றை அமைத்தல் போன்ற பணிகளை ஆரம்பிக்குமாறு வடமாகண ஆளுநர் உள்ளூராட்சி அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

சாட்டி கடற்கரையானது வடபகுதியிலுள்ள இயற்கையான ஓர் எழில்மிகு கடற்கரை என்பதுடன் சுற்றுலாத்தலம் தொடர்பான அதன் மேம்பாடானது வெளிநாட்டு மற்றும் நாட்டின் தென்பகுதி சுற்றுலாப் பயணி களை மட்டுமன்றி யுத்த அனர்த்தத்தினால் மன உளைச்சலுக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கும் புத்தூக்கமளிக்கும் ஒரு சுற்றுலாமையமாக விளங்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# வடமராட்சி கிழக்கு மக்களும் மீளக்குடியமர்த்தப்பட வேண்டும்

## பொது அமைப்புக்கள் கோரிக்கை

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களை தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என வடமராட்சி கிழக்கில் உள்ள பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

நாகர் கோவிலிலிருந்து கட்டைக்காடு வரை மக்கள் மீள் குடியமர்த்தப்படாமையால் உறவினர் வீடுகளிலும், வாடகை வீடுகளிலும் வசித்து வருகின்றனர்.

அத்துடன் தமது தொழில் நடவடிக்கையினையும் சீராக மேற்கொள்ள முடியாமல் உள்ளனர். எனவே யாழ்ப்பாணம் வருகை தரும் ஜனாதிபதியுடன் வலிகாமம் மீள்குடியமர்வு போன்று வடமராட்சி கிழக்கு மீள்குடியமர்வு தொடர்பாகவும் சம்பந்தப்பட்டவர்கள் வலியுறுத்த வேண்டும் என பாதிக்கப்பட்ட மக்கள் கோரியுள்ளனர். (ஓ-6-43)

## புதிய நிர்வாக தெரிவும் ஆண்டுப் பொதுக் கூட்டமும்

புங்குடுதீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலைய புதிய நிர்வாக தெரிவும் ஆண்டுப் பொதுக் கூட்டமும் நாளைமறுநாள் சனிக்கிழமை காலை 10.30 மணிக்கு தலைவர் க.லோக நாதன் அவர்கள் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் புங்குடுதீவு பிரதேச சபை உப அலுவலக பொறுப்பதிகாரி ந.விஜயகுமார் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ-126)

## ஜார்க்கண்டில் பள்ளிக்கூடம் குண்டு வைத்து தகர்ப்பு

ஜார்க்கண்ட் மாநிலம் நெவாரி என்ற இடத்தில் நக்சலைட்டுகள் பள்ளிக்கட்டிடத்தை குண்டு வைத்து தகர்த்தனர். 20 நக்சலைட்டுகள் இரவில் திரண்டு வந்து இந்த குண்டுவெடிப்பை நிகழ்த்தினார்கள். ஜார்க்கண்ட் மாநிலத்தில் மூன்றாம் கட்ட தேர்தல் நேற்று நடந்து கொண்டிருந்த நிலையில் இந்த சம்பவம் நடந்துள்ளது.

குண்டு வெடிப்பு நடந்த பகுதியில் எதிர் வரும் 18ஆம்திகதி தேர்தல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# சந்திர சேகர ராவின் நிலைமை கவலைக்கிடம்!

## தனிமாநிலம் வழங்குவது குறித்து காங்கிரஸ் பரிசீலனை

தெலுங்கானா தனி மாநிலம் கேட்டு, சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் மேற்கொண்டு வரும் தெலுங்கானா ராஷ்டிரிய சமதி தலைவர் சந்திரசேகரராவின் உடல் நிலை கவலைக்கிடமாக உள்ளதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து, ஆந்திராவில் பெரிய அளவில் வன்முறை வெடிக்கும் அபாயம் ஏற்



பட்டுள்ளதால், பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

ஆந்திராவை பிரித்து, தெலுங்கானா தனி மாநிலம் அமைக்கக் கோரி, தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி தலைவர் சந்திரசேகர ராவின் உண்ணாவிரதம் நேற்று முன்தினம் பத்தாவது நாளை எட்டியதை அடுத்து, அவரது உடல்நிலை மோசமானது.

இதையடுத்து, தெலுங்கானா பகுதிகளாக கருதப்படும் ஐதராபாத் உள்ளிட்ட பத்து மாவட்டங்களில் பதட்டம் ஏற்பட்டுள்ளது.

சந்திரசேகர ராவுக்கு ஆபத்து, ஏற்பட்டால் பெரிய அளவில் வன்முறை வெடிக்கும் என அஞ்சப்படுகிறது. பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர். தெலுங்கானாவுக்கு எதிர்ப்பு தெரிவித்த ஆந்திர சுகாதரா அமைச்சரின் வீட்டை ராஷ்டிரிய சமிதி ஆதரவாளர்கள் நேற்று முன்தினம் முற்றுகையிட்டனர். இன்று ஆந்திரா சட்டசபையை நோக்கி மிகப்பெரிய அளவில் ஊர்வலம் நடத்தவும் தெலுங்கானா ஆதரவாளர்கள் திட்டமிட்டுள்ளனர்.

இதனால் பாதுகாப்பிற்காக துணை இராணுவப் படையினரை அனுப்பி வைக்கும் படி மத்திய அரசுக்கு மாநில அரசு வலி யுறுத்தியுள்ளது.

தெலுங்கானா மாநிலம் அமைப்பது குறித்து தீர்மானம் நிறைவேற்றக் கோரி தெலுங்கானா ராஷ்டிரிய சமிதி கட்சியினர் அமளியில் ஈடுபட்டதால், ஆந்திர சட்ட சபை நேற்று முன்தினம் ஒத்தி வைக்கப்பட்டது.

### காங்கிரஸ் முடிபு என்ன?

சந்திரசேகர ராவின் உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளதை அடுத்து தெலுங்கானா விவகாரத்தில் விரைந்து முடிபு எடுக்க வேண்டிய நெருக்கடிக்கு, மத்திய மாநில அரசுகள் தள்ளப்பட்டுள்ளன. இது குறித்து காங்கிரஸ் மேலிடம் டில்லியில் தீவிர ஆலோசனை நடத்தி வருகிறது.

ஆந்திர மாநில காங்கிரஸ் தலைவர் ஸ்ரீனிவாஸ் மற்றும் காங்கிரஸ் எம்.பிக்கள் டில்லியில் முகாமிட்டு கட்சியின் மூத்த தலைவர்களுடன் பேச்சு நடத்தி வருகின்றனர். தெலுங்கானா விவகாரத்தில் விரைந்து முடிவு எடுக்கும் படி இவர்கள், கட்சித் தலைமையை வற்புறுத்தி வருகின்றனர்.

இது குறித்து காங். மூத்த தலைவர் வீரப்ப மொய்லி உடனும் காங்கிரஸ் எம்.பிக்கள்




நேற்றுமுன்தினம் ஆலோசனை நடத்தினர்.

ஐதராபாத்தில் அனைத்து கட்சிகளுடன் ஆலோசனை நடத்திய முதல்வர் ரோசய்யா சோனியா உள்ளிட்ட கட்சித் தலைவர் களுடன் தெலுங்கானா விவகாரம் குறித்து விரிவாக ஆலோசனை நடத்துவார் என, எதிர் பார்க்கப்படுகிறது. எனவே தெலுங்கானா தனி மாநிலம் அமைப்பது தொடர்பான விவகாரத்தில் காங்கிரஸ் மேலிடம் எந்த நேரத்திலும் முடிவை அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஓ-6-2)

# பாபர் மசூதியை இடித்தது நாங்கள் தான்

# என்ன தண்டனை தரப்போகிறீர்கள் ?

## அரசுக்கு எதிராக சுஷ்மா ஆவேசம்

(புதுடில்லி)

பாபர் மசூதியை இடித்தது பா.ஜ.க மற்றும் சங்கபரிவார் அமைப்புகள் தான். இதை செய்ததற்காக என்ன தண்டனை கொடுத்தாலும் ஏற்றுக் கொள்ள தயாராக உள்ளோம் என்று சுஷ்மா சுவராஜ் ஆவேசமாகக் கூறினார்.



லிபரான் கமிஷன் அறிக்கை மீதான விவாதம் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாக நாடாளுமன்றத்தில் நடைபெற்றது.

அங்கு நடைபெற்ற இந்த விவாதத்தில் லோக் சபா பா.ஜ.க வின் துணைத் தலைவர் சுஷ்மா சுவராஜ் பேசும்போது மத்திய அரசுக்கு சவால் விடும் வகையில் ஆவேசமாக பேசி னார்.

அவர் தனது உரையில் மசூதி இடிக்கப்பட்டது குறித்து சி.பி.ஐ. விசாரணை நடத்தியது. இதுபற்றி, லிபரான் அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த இடிப்பு சம்பவத்தில் சதி இருந்ததா இல்லையா என்பது குறித்து விசாரணை நடத்திய சி.பி.ஐ. தனது பதிலாக சதி நடந்துள்ளது என்பதை நிரூபிக்க முடியவில்லை என்று தெரிவித்து விட்டதாக லிபரான் அறிக்கை கூறுகிறது.

அதேபோல் மத்திய மாநில உளவு அமைப்புகளும் விசாரணைக்கு தேவையான ஆவணங்களை தர மறுத்து விட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. லிபரான் விசாரணை கமிஷன் முன்பாக ஆஜரான அரசியல் தலைவர்கள் அளித்த வாக்கு மூலங்களை வைத்துக் கொண்டும் சதி நடைபெற்றதா இல்லையா என்பதை நிரூபிக்க முடியவில்லை.

லிபரான் அறிக்கை என்பது அரசியல் காரணங்களுக்காக பொய்களை கொண்டு ஜோடிக்கப்பட்ட ஒரு ஆவணமே தவிர இது விசாரணை அறிக்கை அல்ல. இப்போதும் கூறுகிறேன். சவாலாகவே கூறுகிறேன். நாங்கள் தான் மசூதியை இடித்தோம். பா.ஜ.க மற்றும் சங்கபரிவார் அமைப்புகள் தான் மசூதியை இடித்தோம். திட்டமிட்டு செய்யவில்லை. மக்களின் எழுச்சியின் விளைவே அது.

என்ன தண்டனை தருவீர்கள் .எங்களை உங்களால் தண்டிக்க முடியுமா னால்தண்டித்துப் பாருங்கள். தண்டனையை ஏற்கத் தயாராக உள்ளோம் என்றுமேலும் கூறினார். (2-6)

# கச்சதீவு அருகே தமிழக மீனவர்களுக்கு மீன் பிடிக்க உரிமை வேண்டும்

## கருணாநிதி பேட்டி

உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டிற் கான இணையத்தளத்தை முதலமைச்சர் கருணாநிதி தொடங்கி வைத்தார்.

அப்போது அவர் அளித்த பேட்டி வருமாறு,

**உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுப்பணிகள் எந்த அளவிலே உள்ளன?**

மாநாட்டுப்பணிகள் நடைபெற்று வருகின்றன. கோவை மாவட்ட ஆட்சித் தலைவருடன் கலந்து பேசி அங்கே நாம் நடத்தவிருக்கின்ற மாநாட்டிற்கான இடவசதிகள் எவ்வாறு இருக்கின்றன என்பதைப் பற்றி ஆய்வு செய்திருக்கிறோம். அங்கே மிகப் பிரமாண்டமான அரங்குகள் இருக்கின்றன. அங்கேயே மாநாட்டினை நடத்துவதற்கான வசதி வாய்ப்புகள் இருக்கின்ற காரணத்தால் அங்கேயே மாநாட்டை நடத்துவது என்று முடிவெடுக்கப்பட்டிருக்கின்றது.

மாநாட்டின் நிறைவு நாளான யூன் 27 ஆம் திகதி அன்று கோவை மாநகரில் மிக முக்கியமான பகுதியில் மாநாட்டினை ஒட்டிய ஊர்வலம் நடைபெறவுள்ளது.

பழந்தமிழ் புலவர்கள் , மன்னர்கள், இலக் கியங்கள் இவைகளைப்பற்றி யெல்லாம் மக்களுக் எடுத்துக்காட்டும் வகையில் அந்த ஊர்வலம் ஏற்பாடு செய்யப்படும்.

**கச்சதீவு ஒப்பந்தம் என்பது முடிந்து போன கதை. அதை மாற்ற முடியாது என்று மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் கிருஸ்ணா சொல்லியிருக்கிறாரே ?**

ஒப்பந்தம் முடிந்து போன கதை என்று சொல்லப்பட்டாலும் அந்த ஒப்பந்தத்திலே இரு சாராரும் ஏற்றுக்கொண்ட பல பகுதிகள் இருக்கின்றன. குறிப்பாக அங்கே யாத்திரை செய்கின்ற மக்களுக்கு இடையூறு இருக்கக் கூடாது . கச்சதீவு பகுதிகளில் மீன் பிடிக்கின்ற உரிமை தமிழ் நாட்டு மீனவர்களுக்கு உண்டு.

கச்சதீவு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்ட போது இந்த சரத்துகள் எல்லாம் இடம் பெற்றிருந்தன. ஆனால் அதன் பின்னர் ஏற்பட்ட நெருக்கடி நிலை காலத்தில் அந்த சரத்துகள் எல்லாம் மீண்டும் இலங்கை அரசினால் திருப்பப்பெற்றுக் கொள்ளப்பட்டு விட்டன என்று தகவல்கள் வெளியாகின. அதை மெய்ப்பிக்கின்ற வகையில் காரியங்கள் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன.


ஒப்பந்தத்தை பரிசீலனை செய்வது என்பது கூடப்பிரச்சினை அல்ல. அதற்கு முன்பு தமிழ் நாட்டு மீனவர்களுக்கும் அதைப்போல இலங்கையிலே உள்ள தமிழர்களுக்கும் எந்த இடையூறும் வராமல் இருக்க வேண்டும் என்பது மிக மிக முக்கியம். ஒப்பந்தம் செய்து கொண்ட போது போடப்பட்ட சரத்துக்களே மீறப்படுகின்றன என்பது தான் கவனிக்கப்படவேண்டிய ஒன்று என்றார். (ஓ-6-2)

# சென்னையில் நடந்த திரைப்பட விழாவில்

# ரஜினி,கமலுக்கு கருணாநிதி விருது வழங்கினார்

(சென்னை)

தமிழக அரசு சார்பில் ஒவ் வொரு ஆண்டும் சிறந்த நடிகர் , நடிகைகள் மற்றும் தொழில் நுட்ப கலைஞர்களுக்கு திரைப்பட விருதுகள் வழங்கப்படுகின்றன. இதற் கமைய 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளுக்கான திரைப்பட விருதுகள் சில நாட்களுக்கு முன்பு அறிவிக்கப்பட்டன.




விருது வழங்கும் விழா சென்னை பல்கலைக் கழக நூற்றாண்டு விழா அரங்கில் நேற்று முன்தினம் மாலை கோலா கலமாக நடந்தது. இதில் தமிழ்த் திரைப்பட உலகமே திரண்டு வந்தது என்று சொல்லும் அளவுக்கு நடிகர் , நடிகைகளும் தொழில்நுட்ப கலைஞர்களும் கலந்து கொண்டனர்.

### கலைநிகழ்ச்சிகள்

விழாவில் முதல் நிகழ்ச்சியாக திரைப்பட நட்சத்திரங்களின் கலை நிகழ்ச்சிகள் நடந்தன. வித்தியாசாகர் இசையில் பின்னணி பாடகர் ஸ்ரீனிவாஸ், பெல்லிராஜ், பாடகிகள் சின்மயி , மஹதி ஆகியோர் பாடினார்கள். நடிகைகள். பூர்ணா , மும்தாஜ், நமீதா, மீனாட்சி ஆகியோர் நடன இயக்குநனர் கலா குழு வினருடன் இணைந்து நடனமாடினார்கள்.

நடிகர் வடிவேலு , முதல் அமைச்சர் கருணாநிதியை வாழ்த்தி ஒரு பாடலைப் பாடினார். நடிகர் எம்.எஸ்.பாஸ்கர் சித்திரம் பேசுதடி என்ற பழைய பாடலைப்பாடினார். அதன் பிறகு விருது வழங்கும் நிகழ்ச்சி தொடங்கியது.

விழாவில் முதல் அமைச்சர் கருணாநிதி கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார். 2007ஆம் ஆண்டுக்கான சிறந்த நடிகர் விருது நடிகர் ரஜனிகாந்துக்கு வழங்கப் பட்டது. சிறந்த நடிகைக்கான விருதை ஜோதிகா பெற்றார்.

இதேபோல் 2008ஆம் ஆண்டுக்கான சிறந்த நடிகர் விருது நடிகர் கமலஹாச னுக்கும் சிறந்த நடிகைக்கான விருது சிநேகாவுக்கும் வழங்கப்பட்டது.

ரஜனிகாந்தும், கமலஹாசனும் விருது பெற்ற போது அரங்கத்தில் கூடியிருந்த அனைவரும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். (ஓ-2-6)

# ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டால் வரும் ஜனாதிபதித்தேர்தல் ஜனநாயக தேர்தலாகாது

## எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு

நடைபெறப்போகும் அரச தலைவருக்கான தேர்தல் இலங்கையின் எதிர்காலத்திற்கு முக்கியமானது. ஆனால் ஊடகசுதந்திரம் மறுக்கப்பட்டால் அது ஜனநாயக முறையில் நடைபெற்றதாக கருதமுடியாது என எல்லைகள் அற்ற ஊடகவியலாளர் அமைப்பு நேற்று முன்தினம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

எதிர்வரும் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் பங்கு பற்றும் அரசியல் கட்சிகளும் வேட்பாளர்களும் ஊடகவியலாளர்களின் பாதுகாப்பை முதன்மைப்படுத்துவதுடன் ஊடக சுதந்திரத்தையும் மதிக்க வேண்டும். இந்த தேர்தல் இலங்கையின் எதிர்காலத்திற்கு முக்கியமானது. ஆனால் ஊடக சுதந்திரம் மறுக்கப்பட்டால் அது ஜனநாயகமான முறையில் நடைபெற்றதாக கருதமுடியாது.

எல்லா ஊடகங்களினதும் சுதந்திரமான செயற்பாடுகளை அரசும் எதிர்க்கட்சிகளும் உறுதிப்படுத்த வேண்டும். அவர்கள் எங்கு செல்வதற்கும், யாருடன் நேர்காணல்களை மேற்கொள்வதற்கும் சுதந்திரம் வழங்கப்படல் வேண்டும். அரசின் கட்டுப்பாட்டில் உள்ள பத்திரிகைகளும் தொலைக்காட்சிகளும் நடுநிலைமையான பிரச்சாரங்களை மேற்கொள்ள வேண்டும். எதிர்க்கட்சிகளுக்கு எதிராக பிரச்சாரங்களை மேற்கொள்ளுமாறு அரசு ஊடகங்களை பலவந்தப் படுத்துவது ஊடகவியலாளர்களை ஆபத்தில்தள்ளுவதாகவே இருக்கும் என்றும் வட பகுதிக்கு செல்வதற்கு ஊடகவியலாளர் மீது விதிக்கப்பட்டுள்ள தடை மற்றும் எதிர்க்கட்சிகளின் மாநாட்டில் அரச ஊடகங்களின் ஊடகவியலாளர்கள் தாக்கப்பட்டவை என்பன தேர்தல் நடைபெறும்சூழ்நிலையை மேலும் சிக்கலாக்கியுள்ளதுஎன அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-6)


**யாவரும் எதிர்பார்க்காத அதிரடி மலிவு விற்பனை**

50 வருட பூர்த்தியை முன்னிட்டு 20%-40%வரையான விசேட கழிவு

எங்களிடம் எல்லாவிதமான அப்பியாசக் கொப்பிகள், பாடப் புத்தகங்கள், பாடசாலை உபகரணங்கள், சிறுவர்களுக்கான நாலுறூள், இரட்டை றூள் கொப்பிகள் (160,80 பக்கங்களில்) மற்றும் எழுது கருவிகள் அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் தெரிவு செய்து குறைந்த விலையில் தரமான பொருட்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தரங்குறைந்த கொப்பிகளை வாங்கி சிறுவர்களின் தரத்தைக் குறைக்காதீர்கள்

2500/- பெறுமதிக்கு அதிகமாகக் கொள்வனவு செய்பவர்களுக்கு அழகிய My Clear Bag (Rexion) இலவசமாக வழங்கப்படும்.

சனி ஞாயிறு தினங்களில் முழுமையாக எமது நிறுவன வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றும் என்பதனை அறியத்தருகின்றோம்.

**ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்**

212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (C3886)


# தேர்தலில் வெற்றியீட்டினால் பொன்சேகாவுக்கு ஆதரவுதரப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித்தேர்தலில் எதிர்க்கட்சிகளின் பொதுவான வேட்பாளர் ஜெனரல் சரத்பொன்சேகா வெற்றியீட்டினால் அந்த அரசாங்கத்திற்கு ஆதரவளிக்கப்படும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அறிவித்துள்ளது.

மலையகப் பிரதேசங்களில் அரசாங்கத்தினால் ஏற்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தி நடவடிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு தாம் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷவிற்கு நிபந்தனையற்ற ஆதரவினை வழங்கத் தீர்மானித்துள்ளதாகவும் தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர் ஜெனரல் சரத்பொன்சேகாவிற்கு ஆதரவு அளிப்பது குறித்து தீர்மானிக்கப்படும் என கட்சியின் தலைவர் முத்து சிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

தற்போது பெருந்தோட்ட மக்கள் மற்றும் மலையகப்பிரதேசங்களில் அரசாங்கம் முன்னெடுத்துவரும் அபிவிருத்தித் திட்டங்களின் அடிப்படையில் ஆதரவு வழங்கப்பட்டு வருவதாகவும் முதல் தடவையாக பெருந்தோட்ட மக்களுக்கு அரசாங்கம் ரூபா 4 இலட்சம் வரையிலான வீடமைப்பு கடன் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதாக சுட்டிக்காட்டியுள்ள அவர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு நிபந்தனையற்ற வகையில் ஆதரவளிக்க தீர்மானித்தாலும் தேவையான நேரத்தில் அழுத்தங்களை பிரயோகிக்கக்கூடிய வல்லமை தம்மிடம் காணப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ஏனைய பெருந்தோட்ட கட்சிகள் மற்றும் தொழில் சங்கங்கள் வேறும் நோக்கங்களைக்கொண்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

# கனகரட்ணம் எம்.பி.க்கு மூன்று மாத விடுமுறை

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.கனகரத்தினத்திற்கு மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற நடவடிக்கைகளில் பங்குபற்றாமல் இருப்பதற்கு சபை நேற்று முன்தினம் அங்கீகாரம் வழங்கியது.

இதற்கான பிரேரணையை கூட்டமைப்பின் எம்.பியான துரை ரட்ணசிங்கம் முன் மொழிந்ததுடன் சொலமன் சிறில் எம்.பி .வழிமொழிந் தார்.

இதன்பிரகாரம் 2009ஆம்ஆண்டு டிசம்பர் 8ஆம் திகதியிலிருந்து 3 மாதங்களுக்கு சமூகமளிக்காமல் இருப்பதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. (ஓ-6)

**விவாத அரங்கு 3**

மாணவர்களின் கல்வி முன்னேற

யாழ். குடாநாட்டிலுள்ள சிறிய பாடசாலைகளை பெரிய பாடசாலைகளுடன்

இணைக்க வேண்டும் / இணைக்கக் கூடாது


உங்கள் கருத்துக்களை அனுப்ப வேண்டிய இறுதித்திகதி :– 11.12.2009

குறிப்பு: ஒரு தடவை விவாத அரங்கில் கலந்து கொண்டவர்கள் இன்னொரு விவாத அரங்கில் பங்கேற்பது தவிர்க்கப்பட்டுள்ளது.


# யாழ்/ஆனைப்பந்தி மெ.மி.த.க.பாடசாலை பரிசளிப்பு விழா –2009 அழைப்பிதழ்

**தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை (2009)இல் சித்தியடைந்து கௌரவிக்கப்படவுள்ள மாணவர்கள்**


ச.கலைச்செல்வன்
புள்ளிகள் -179 மாவட்ட நிலை-8



இ.பிரபஞ்சன்
புள்ளிகள் -165


க.பிரகலாதன்
புள்ளிகள் -164



கு.அயிலவன்
புள்ளிகள் -158



ச.ஸ்ரீசிந்துஜன்
புள்ளிகள் -157


கு. அட்சதன்
புள்ளிகள் -154



இ.பிரிதிகா
புள்ளிகள் -151


ரா.அபிராஜ்
புள்ளிகள் -150



தி.கபிலன்
புள்ளிகள் 147



ச.சாலுஜன்
புள்ளிகள் -156



ஜெ.அஜீர்ஷன்
புள்ளிகள் -146


சு.அரிகரன்
புள்ளிகள் -146


ந.ஐங்கரன்
புள்ளிகள் -145


ச.அமிர்தவர்ஷினி
புள்ளிகள் -145


கி.டக்ஷலன்
புள்ளிகள் -141


ப.மதுசன்
புள்ளிகள் -141


ச.கஜானி
புள்ளிகள் -141


மா.றஜீபன்
புள்ளிகள் -132

**இடம் :- பாடசாலை மண்டபம்**
**காலம்:- 10.12.2009 (வியாழக்கிழமை)**
**காலை 9.00மணி**

**தலைவர்**
திரு.முரளிதரன் (அதிபர்)

**பிரதம விருந்தினர்**
லயன் வைத்திய கலாநிதி வை.தியாகராஜா
*MJF,J.P. (Deput Cabinet Secretay-North)*
*2007/2008 District 306 B-SRILANKA*

1. திரு.சி.மாணிக்கராஜா
கோட்டக்கல்விப் பணிப்பாளர்–நல்லூர்கல்விக் கோட்டம்

2.திரு. பூ குகதாசன்
உதவிக் கல்விப்பாணிப்பாளர் (ஆரம்பக்கல்வி) யாழ்.கல்வி வலயம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்
அதிபர், ஆசிரியர், மாணவர்.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

**100 புள்ளிகளுக்கும் 138 புள்ளிகளுக்கும் இடைப்பட்ட 24 மாணவர்களின் பெயரும் புள்ளியும்**

கிளிநொச்சி மாவட்டம்

தி. தமிழினி –138, ஸ்ரீ சுயீன்–135, ல.லவ்மிகன்–130, செ.பிரவீனா–130, சு.துவாரகன்–129, இ.திவாகர்–128, ஜெ.வேஜினி–127, வி.தர்சிகன்–125, அ.தனுஸ்காந்–122, ஜெ.சதுஷன்–120, சு.கீர்த்தனா–118, வி.நிரோஜன்–118, சி.மதுசன்–113, து.டிசாந்தன்–111, ம.நவநீதன்–107, வ.கஜீந்தினி–106, தி.திலக்ஷன்–105, ச.பிரிந்தா–104, ச.மதிவதனி–104, செ.கஜலக்ஷி–102, கோ.கோபிராம்–102, க.கிரிஷாந்–102, ச.மகிழினி–100, ஜெ.ஆஜலீஜன்–115.

தரம் –05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்களை வாழ்த்துவதோடு அவர்களது சித்திக்கு உழைத்த அதிபர் , ஆசிரியர்களையும் நன்றியுடன் பாராட்டுவதோடு பாடசாலைக் கல்விச் செயற்பாடுகளுக்கு ஒத்துழைத்த கல்வித்திணைக்கள அதிகாரிகளுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெற்றோர்,
யா/ஆனைப்பந்தி மெ.மி.த.க வித்தியாலயம்.

# சரத்பொன்சேகாவை சர்வாதிகாரியாக சித்தரிப்பதற்கு அரசாங்கம் முயற்சி



## ஜே.வி.பி. தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொது வேட்பாளர் ஜெனரல் சரத் பொன்சேகா இராணுவத் தளபதி என்பதால் அவரை சர்வாதிகாரியாக காட்டுவதற்கு ஜனாதிபதியும் அரச தரப்பினரும் முற்படுகின்றனர். ஆனால் அவர் அப்படியானவர் அல்ல. அவரது வெற்றி இப்போதே உறுதியாகிவிட்டது. இதன் மூலம் மக்கள் எதிர்பார்த்திருந்த நல்லொழுக்கமுள்ள நாடு உருவாகப் போகின்றது என்று ஜே.வி.பி. யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதி என்பவர் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பவராக இருக்க வேண்டுமே தவிர பிரச்சினைகளை தோற்றுவிப்பவராக இருக்க முடியாது.

அதேபோல் நிகழ்ச்சி நிரலே இல்லாத ஒருவரை வழியனுப்பி வைப்பதற்கு மக்கள் அணிதிரண்டு விட்டனர் என்றும் அவர் கூறினார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் பொது வேட்பாளராக நிறுத்தப்பட்டுள்ள ஜெனரல் சரத் பொன்சேகாவுக்கு ஆதரவு தெரிவித்து ஜே.வி.பி.யின் மக்கள் பிரதிநிதிகள் ஏற்பாடு செய்திருந்த நிகழ்வு கடந்த திங்கட்கிழமை கொழும்பு புதிய நகர மண்டபத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே தலைவர் சோமவன்ச அமரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்நதும் உரையாற்றுகையில்,

ஜனவரி 26 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறப் போகின்றது. இதனை உத்தியோகபூர்வமாக அரசாங்கம் அறிவித்திருந்த போதிலும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இதுவரையில் ஒரு வார்த்தையேனும் வெளியிடவில்லை. எப்படியிருப்பினும் நடைபெறவிருக்கின்ற தேர்தலானது நீதியானதும் சுதந்திரமான்துமான தேர்தலாக நடைபெறப் போவதில்லை என்பது மட்டும் தெளிவாகியுள்ளது.

கடந்த மாதம் 30 ஆம் திகதி நுகேகொடையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜே.வி.பி. யின் பிரசாரக் கூட்டத்திற்கு உரிய அனுமதி பெற்றிருந்த போதிலும் இறுதி நேரத்தில் அது ரத்துச் செய்யப்பட்டது.

அதேபோல் கொழும்பு சௌசிறிபாயவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வுக்கு உரிய அனுமதி பெற்றிருந்தும் அது நிறைவேற்று அதிகாரத்தினால் சடுதியாக இரத்துச் செய்யப்பட்டுள்ளது. இதன் மூலமே சுயாதீனமான தேர்தல் ஒன்று நடைபெறப் போவதில்லை என்பதை அரசாங்கம் ஒப்புவித்துள்ளது.

ஒழுக்கமுள்ள நாட்டில் வாழ்வதையே மக்கள் விரும்புகின்றனர். அதனை ஏற்படுத்துவதற்கே ஜெனரல் சரத் பொன்சேகா எம்மோடு இணைந்திருக்கின்றார். அவர் தனக்கு கொடுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களையும் அவரால் கொடுக்கப்படுகின்ற வாக்குறுதிகளையும் நிறைவேற்றிக் காட்டக்கூடியவர் என்பதை நிரூபித்துள்ளார்.

அந்த வகையில் நிறைவேற்று அதிகாரத்தை இல்லா்தொழிப்பதற்கும் வீழ்ச்சியடைந்திருக்கும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கும் அவர் சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் என்றார். (ஓ-6)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் விவசாய முயற்சிகள்

(கொழும்பு)

இலங்கையின் வடக்கே முல்லைத்தீவு மாவட்டத்தில் மீளக்குடியமர்த்தப்பட்டுள்ளவர்கள் விவசாய முயற்சிகளில் ஈடுபடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

துணுக்காய் மற்றும் மாந்தை கிழக்கு ஆகிய பிரதேச செயலாளர்கள் பிரிவில் பத்தாயிரம் பேர் இதுவரையில் மீளக்குடியமர்த்தப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றார்கள். இவர்களில் நாலாயிரம் குடும்பங்கள் நெற்செய்கை மற்றும் காய்கறிச் செய்கையில் தற்போது ஈடுபட்டிருப்பதாக முல்லைத்தீவு அரசாங்க அதிபர் தெரிவித்திருக்கின்றார்.

நெற்செய்கைக்கென இரண்டு ஏக்கர் காணியும், தோட்டச் செய்கைக்கென ஒரு ஏக்கரும் அதிகாரிகளினால் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றது. தோட்டச் செய்கையில் 2000 விவசாயிகள் ஈடுபட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றார்கள். (ஓ-2-6)

# முரளிதரனுக்கு வழங்கப்பட்ட உபதலைவர் பதவியே எஸ்.பி.திஸாநாயக்கவுக்கும்

(கொழும்பு)

தேசநிர்மாண அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரனுக்கு வழங்கப்பட்ட கட்சியின் உப தலைவர் பதவியே எஸ்.பி.திஸாநாயக்கவிற்கும் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவுள்ள எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு அந்தக் கட்சியின் உபதலைவர் பதவி வழங்கப்படவுள்ளது.

நேற்று பிற்பகல் ஜனாதிபதிக்கும், எஸ்.பி. திஸாநாயக்கவிற்கும் இடையில் நடைபெற்ற சந்திப்பின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் முரளிதரனுக்கும் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் உபதலைவர் பதவி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவராகக் கடமையாற்றிய எஸ்.பி.திஸாநாயக்கவிற்கு வழங்கப்பட்ட பதவி போதுமான பதவியல்ல என அரசியல் வட்டாரத்தில் நோக்கப்படுகிறது. (ந-5)

# பொத்துவில் பகுதியில் கருணா குழுவினரின் கப்பம் கோரும் நடவழிக்கைகள்

## சிங்கள ஊடகம் தகவல்

(கொழும்பு)

பொத்துவில் பகுதியில் அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் எனப்படும் கருணாவின் சகாக்களான இளம்பரிதி போன்றவர்கள் கப்பம் கோரி வருவதாக சிங்கள ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

இங்கு மக்களிடம் கப்பம் கோரும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தேர்தலின் போது வழங்கப்பட வேண்டிய பாதுகாப்பு குறித்து ஆராயும் நோக்கில் அண்மையில் கிழக்கு மாகாணத்திற்கு தேர்தல் அதிகாரிகள் மேற்கொண்ட விஜயத்தின் போதே இந்த விடயம் அம்பலமாகியுள்ளது.

ஆயுதக் குழுக்களின் நடவடிக்கைகள் பூரணமாக இல்லாதொழிக்கப்படவில்லை என அந்த சிங்கள ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஓ-6)

# இணையதளத்தில் இயங்கும் வங்கியில் கொள்ளையிட்ட 3 இலங்கையர் கைது

(கொழும்பு)

இலங்கையில் இயங்கி வரும் ஈ வங்கிகளில் கொள்ளையிட்ட மூன்று இலங்கையர்களை தடுப்புக்காவலில் வைத்து விசாரிக்குமாறு கொழும்பு மாவட்ட நீதவான் நிஷாந்த ஹப்பு ஆராய்ச்சி உத்தரவிட்டுள் ளார்.

இணையம் ஊடாக இயங்கி வரும் இந்த ஈ வங்கிகளின் வாடிக்கையாளர்களது தகவல்களை மோசடியான முறையில் பெற்றுக் கொண்டு குறித்த நபர்கள் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குற்றம் சுமத்தப்பட்டுள்ள வெள்ளம்பிட்டியைச் சேர்ந்த வடிவேலு ஆனந்தசிவா ஸ்ரீஸ்கந்தராஜா பிரியதர்சினி மற்றும் ஸ்ரீஸ்கந்தராஜா பிரசன்னராஜ் ஆகியோரை எதிர்வரும் 22ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

இரகசிய குறியீட்டு இலக்கங்களை சட்டவிரோதமான முறையில் பெற்றுக்கொண்டு அதன் ஊடாக பணத்தைப் பெற்றுக் கொண்டு குறித்த சந்தேக நபர்கள் மூன்று கோடியே 8 இலட்சத்து 18 ஆயிரத்து 300 ரூபா பணத்தை மோசடி செய்துள்ள தாக குற்றம் சுமத்தப்படுகிறது. (ஓ-2-6)

# கிழக்கு ஆயுதக்குழு தலைவரை கைது செய்ய உத்தரவு

(கொழும்பு)

கிழக்கில் இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படும் ஆயுதக் குழுவின் தலைவரை உடனடியாக கைது செய்யுமாறு பாதுகாப்பு தரப்பினருக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. மக்கள் விடுதலை இராணுவம் என தம்மை அடையாளப்படுத்திக் கொண்டுள்ள குறித்த இந்தக் குழுவின் தலைவர் கோணேஸ் என்பவரை உடனடியாக கைது செய்யுமாறு பாதுகாப்பு தரப்பினர் கிழக்கு படைத் தளபதிகளுக்கு கட்டளை பிறப்பித்துள்ளார். (ஓ-2-6)

# பொன்சேகா உறவினர் உதவியுடன் ஆயுதக் கொள்வனவை மேற்கொண்டார்

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உறவினர்களின் ஊடாக ஜெனரல் சரத் பொன்சேகா ஆயுதக் கொள்வனவினை மேற்கொண்டதாக அரசாங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

தனது மருமகனின் ஊடாக பொன்சேகா ஆயுதக் கொள்வனவினை மேற்கொண்டுள்ளதாகவும், இந்தக் கொடுக்கல் வாங்கல்களின் வெளிப்படைத் தன்மை தொடர்பில் சந்தேகம் ஏற்பட்டுள்ளதாகவும் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இராணுவ தளபதியாக பதவியேற்ற காலம் முதல் இவ்வாறான கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றுள்ளதாகவும் இந்தக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சும், குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் விசாரணைகளை நடத்தவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஜெனரல் சரத் பொன்சேகா மீது சேறு பூசும் நோக்கில் இதனைத் தாம் தெரிவிக்கவில்லை எனவும், ஜனாதிபதியின் மீது சேறு பூசுபவர்கள் இதனை தெரிந்து கொள்ள வேண்டும் எனவும் யுத்த காலத்தில் பாதுகாப்பு அமைச்சில் கோத்தபாய ராஜபக்ஷவிற்கு தெரியாமல் பல்வேறு முறைகேடுகள் இடம்பெற்றுள்ளதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ஓ-2-6)





சாவகச்சேரி றோ.க.த.க வித்தியாலயத்தின் இல்ல மெய்வன்மைப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கோ. வரதராஜ மூர்த்தி ஆரம்பப் பிரிவில் முதலிடம் பெற்ற மாணவி சா. வேஜின்மேரிக்கு கேடயம் வழங்குவதையும் உடற்பயிற்சி கண்காட்சி நிகழ்வில் பங்குபற்றிய மாணவர்களுடன் சாவகச்சேரி பங்குத்தந்தை, அதிபர் ந. ஜெயக்குமாரன் மற்றும் ஆசிரியர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம்.

சுதந்திரம்:
இருளில் பெற்றோம்; இன்னும் விடிய வில்லை.

~ மேத்தா

வலம்புரி

## பெரிய பூனைக்கொரு வாசல் குட்டிப் பூனைக்கு இன்னொரு வாசல்

மனித உரிமைகள் தினம் இன்று யாழ்ப் பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறவுள் ளது.

இதில் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதி நிதிகள் பலர் கலந்து கொள்கின்றனர். அதிசயம் ஆனால் உண்மை என்று கூறுமளவிற்கு மனித உரிமைகள் தினநிகழ்வில் தமிழ் அரசியல் கட் சிப் பிரமுகர்கள் ஒரு மேடையில் சந்திக்கவுள் ளமை ஏற்பாட்டாளர்களின் அதீத திறமையைக் காட்டுகின்றது.

மனித உரிமைகள் தின நிகழ்வில் ஒன்று சேரும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழரின் உரி மை விடயத்திலும் ஒன்று சேர மாட்டார்களா? என்று ஏழை மனம் எண்ணுகின்றது.

தமிழினம் ஒன்று சேர்வதற்கான அறிகுறி யாக–அத்திபாரமாக இதனைக் கருத முடியுமா? என்ற சிந்தனைக் கீற்றுகளும் உள்ளத்தைத் தொட்டுவிட்டுச் செல்கின்றன.

தமிழர்களின் உரிமைப் போராட்டம் இன்று மிகக் குறுகி ‘வலி.வடக்கில் மீளக்குடியமர்தல்’ என்ற உரிமைப் போராட்டமாக மாறியுள்ளது.

தமிழ் மக்களின் பொது அமைப்பாக விளங் கும் ஸ்தாபனங்களில் இருந்து கொண்டு ஒரு குறிப்பிட்ட பிரதேசத்தின் மீள்குடியமர்வை மட் டும் அடிக்கடி பேசி எங்கள் இனத்தின் உரிமை சார் விடயங்களை முகவரி இழக்கச் செய்யும் அறியாமை தொடர்கின்றது.

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா யாழ்ப் பாணத்திற்கு வந்தால் கூட அவரிடம் வலி. வடக் கில் குடியமர வழிசெய்யுங்கள் என்று தான் கேட்பார்கள்.

என்ன செய்வது? பெரிய பூனைக்கொரு வாசல், குட்டிப் பூனைக்கொரு வாசல் என்ற அறி வுடமை எங்கள் மண்ணில் தாண்டவமாடுகின் றது.

பெரிய பூனைக்கான வாசல் திறக்கப்பட்டால் அந்த வழியால் குட்டிப் பூனையும் தாராளமாக நுழையலாம் அல்லவா?

இந்த உண்மை தெரியாமல் வலி.வடக்கில் குடியமர்த்துங்கள்; கடற்தொழிலுக்கு செல்ல விடுங்கள் என்று பிரச்சினைகளைக் கூறுபோட்டு சுயலாபம் தேட முற்படுகின்றோம்.

தயவு செய்து இந்த அறியாமையை போக்க இன்று வீரசிங்க மண்டபத்தில் நடைபெறும் மனித உரிமைகள் தினம் வழி செய்யட்டும்.

தமிழர் பிரச்சினைக்கு தீர்வு தாருங்கள் என்று கேட்பதே எங்களிடம் இருக்கக் கூடிய அத்தனை பிரச்சினைகளுக்குமான தீர்வாகும்.

இதற்காக வீரசிங்கம் மண்டபத்தில் ஒன்று கூடும் தமிழ் அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் குரல் கொடுக்கட்டும்.

கூடவே, யுத்தால் பாதிக்கப்பட்டு மீளக்குடிய மர்ந்த குடும்பங்களைச் சேர்ந்த சிறுவர்க்ள் பலர் தங்கள் உடம்பில் எறிகணைக் குண்டுக ளின் துகள்களை வைத் திருக்கின்றார்கள் என்ற அதிர்ச்சித் தகவல் தொடர்பில் தகுந்த நட வடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இந்த முடிபை இன்றைய மனித உரிமைகள் தினத்தில் எடுத்தால் அதுவே எங்கள் சிறார்க ளுக்கு செய்யும் பெரும் புண்ணியமாக அமையும்.

# உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுங்கள் தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினையை தீருங்கள்

## மனோ கணேசன் காட்டம்



(கொழும்பு)

யாழ் . வலி வடக்கிலும், திருகோணமலை சம்பூரி லும் அமைந்துள்ள உயர்பா துகாப்பு வலயங்களை உட னடியாக அகற்றுங்கள். யாழ் ப்பாணம், அநுராபுரம், நீர் கொழும்பு, கொழும்பு, கண்டி, சிறைச்சாலைகளிலே உண் ணாவிரதம் இருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் விடு தலை செய்யுங்கள் வெற்று வாய்ப்பேச்சுகளை நிறுத்திவிட்டு, இந்த இரண்டு காரியங்க ளையும் உடனடியாக அரசாங்கம் செய்தாகவேண்டும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவரும், மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற குழுவின் தலைவருமான மனோ கணேசன் எம்.பி அறிவித்துள்ளார். கொழும்பில் நேற்று மனித உரிமைகளுக்கான நாடாளுமன்ற குழு நடத்திய ஊடகவியலாளர் மாநாட்டில் குழுவின் செயலாளர் ஜயலத் ஜெயவர்த்தன, முஜிபர் ரஹமான் ஆகியோருடன் இணைந்து கலந்து கொண்ட மனோ கணேசன் மேலும் கூறியுள்ளதாவது,

இன்று யாழ்ப்பாணத்தில் மழைபெய்தால் கொழும்பில் சிலர் குடைபிடிக்கிறார்கள். யாழ்ப்பாண மக்கள் மழையில் நனைந்தால் இங்கே சிலருக்கு தடிமன் பிடிக்கிறது. இத் தகைய விசித்திரங்களுக்கு காரணம் ஒன்றும் பரம இரகசியம் கிடையாது. நடைபெறவிருக்கும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பிலே தமிழ் மக்களின் வாக்குகளை வாங்குவதற்கு தென்னிலங்கையிலே போட்டாபோட்டி நடந்து கொண்டிருக் கின்றது. நான் யாழ்ப்பாணம் சென்று அங்கு நடைபெறவிருக் கும் மனித உரிமைகள் நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளேன். எனக்கு அடிக்கடி யாழ்ப்பாணம் செல்லும் சந்தர்ப்பம் கிடைத்ததில்லை. ஆனால் வடக்கிலும் கிழக்கிலும் வாழ்கின்ற மக்களுக்காக நாங்கள் இடைவிடாது குரல் கொடுத்து போராடி இருக்கின்றோம். எனவே நான் யாழ்ப்பாணத்திலே ஒரு அரசியல் விருந்தினர் அல்ல. யாழ் மக்களின் உணர்வுகள் எங்கள் உயிருடன் என்பொழுதும் கலந்திருக்கின்றது என் றார்.

### உயர் பாதுகாப்பு வலயங்கள் என்ற பெயரில் மண் அபகரிப்பு

போர் நடைபெறும் பொழுது விடுதலைப்புலிகளின் பீரங்கி தாக்குதல் எல்லைக்குள் இராணுவ முகாம்கள் இருந்த காரணங்களை காட்டி அரசாங்கம் உயர்பாதுகாப்பு வல யங்களை அமைத்தது. இன்று போர் இல்லை. விடுதலை புலி களின் பீரங்கிகளும் இல்லை. எனவே எந்த அடிப்படையில் இன்னமும் உயர்பாதுகாப்பு வலயங்களை இருக்கின்றன என இந்த அரசாங்கத்தை கேட்கின்றேன். வலிகாமம் வடக்கிலே சுமார் 3800 ஏக்கர் நிலப்பரப்பு உயர்பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் சுற்றி வளைக்கப்பட்டிருப்பதாக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பிணர்கள் என்னிடம் கூறியுள்ளார் கள். இதற்குள் பெருந்தொகை தனியார் நிலங்களாகும். எங்கள் மக்களின் வீடு வாசல், நிலம் ஆகியவை மாத்திரம் அல்ல, எங்கள் இனத்தின் வரலாறும் சுற்றி வளைக்கப்பட்டி ருக்கின்றது.அதேபோல் சம்பூரிலும் நமது மக்கள் தமது பாரம் பரிய வாழ்விடங்களை இழந்து தவிக்கிறார்கள்.இது இன் றைய போர்முடிந்துவிட்ட சூழலில் ஒரு போதும் அனுமதிக் கப்பட முடியாததாகும்.நிலங்களை சுற்றி வளைத்து எதிர்கா லத்திலே திட்டமிட்ட குடியேற்றங்களை நடத் துவதற்கு தயாராகின் றீர்களா என இந்த அரசாங்கத்தை கேட்கவிரும்புகின்றேன்.

### தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம்

அதேபோல்இன்று இன்னொரு எரியும் பிரச்சினை , தமிழ் அரசியல் கைதிகளின் பிரச்சினையாகும். இந்த ஊடக சந்திப்பு நடைபெறும் இந்நேரத்திலே யாழ்ப்பாணம், அநு ராதபுரம்,நீர்கொழும்பு ,கொழும்பு,கண்டி ஆகிய சிறைச் சாலைகளிலே தமிழ்கைதிகள் சாகும் வரை உண்ணாநோன்பை கடைப்பிடிக்கிறார்கள்.போர் முடிந்து நாடு விடுதலை பெற்று விட்டதாக கூறுகின்ற இந்த அரசாங்கத்திற்கு பல்லாண்டுக ளாக சிறைவாழ்க்கை வாழ்ந்து தமது வாழ்க்கையின் பெரும் பகுதியை சிறைக்கம்பிகளுக்கு பின்னால் தொலைத் துவிட்ட இவர்களுக்கு விடுதலை கிடைக்கவேண்டும் என தோன்ற வில்லையா?

கடந்த பல மாதங்களாக அமைச்சர் மிலிந்தமொறகொட தமிழ் கைதிகள் தொடர்பில் பல்வேறு அறிக்கைகளையும், உறுதிமொழிகளையும் அள்ளிவீசி கொண்டிருக்கின்றார். இனிமேல் எங்களுக்கு உறுதிமொழிகள் தேவையில்லை. பொது மன்னிப்பு அல்லது சட்டரீதியான பிணை அல்லது புனருத் தாபன திட்டங்களில் சேர்த்துக்கொள்ளல் ஆகிய ஏதாவது ஒரு தீர்வை வழங்குங்கள் என்ற இந்தக் கைதிக ளின் உணர் வுகளை நான் அரசாங்கத்திற்கு தெரிவித்துக் கொள்கின் றேன். யாழ்ப்பாண சிறைச்சாலைக்கு சென்று அங்கு உண் ணாவிரதம் இருக்கும் கைதிகளை சந்திப்பதற்கும் விரும் புகின்றேன் என்று மேலும் தெரிவித்துள்ளார். (ஓ-2-6)

## அடையாளஅட்டை இல்லாத பரீட்சார்த்திகளுக்கு

(யாழ்ப்பாணம்)

க.பொ.த. சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றும் பரீட் சார்த்திகளில் தேசிய அடையாள அட்டை அல்லது அஞ்சல் அடையாள அட்டை இல்லாத பரீட்சார்த்திகள் தமது ஆள் அடை யாளத்தை உறுதிப்படுத்துவதற்காக பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட மூன்று புகைப்படங்களை யாழ்.கல்வி வலயத்தில் சமர்ப்பித்து தமது அடையாளத்தை உறுதிப்படுத் திக் கொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் அறி வித்துள்ளார். (ஓ-14-7)

## மகரஜோதிப்பெருவிழா

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வியாவில் ஐயனார் கோவில் மகரஜோதிப் பெருவிழா எதிர்வரும் 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற் பகல் 8.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதில்மதுரை ஸ்ரீசடகோப ராமானுஜ ஐயப்ப பக்தசபை உறுப் பினரும் யாழ்.மாவட்ட 18 ஆம் படி குருசாமியுமான அ.இந்து தாசன் கலந்து கொண்டு விழாவை நடத்தவுள்ளார். (ஓ-4)

# கஷ்டங்களின்போது இறைவன் நெருங்கி வருகின்றார்

எமது வாழ்வில் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவிக்கும்போது கடவுள் தமது நெருக்கத்தையும் அன் பையும் தரும் அளவிற்கு, நாம் சுகமாக இருக்கும்போதும் வாழ்க்கையை அனுபவித்து மகிழும்போதும் தருவதில்லை.

ஊட்டியில் கோடை முகாம் நடத்துவதற்கு ஒரு குறித்த நாளில் தீர்மானித்த ஸ்வாமி தன் மாணவர்கள் எல்லோரை யும் அங்கு கூட்டிச்சென்றார். வகுப்புக்கள் முடிந்து பெங்களூ ருக்குத் திரும்பும் முன் ஸ்வாமி கூறினார். “ஊட்டிக்கு வந்ததால் சுற்றிப் பார்த்துவிட்டு திரும்புங்கள். கடவுளின் படைப்பில் உள்ள அனைத்து அழகையும் கண்டு அனுபவித்து மகிழுங் கள். ஸ்வாமியும் தங்களுடன் வர வேண்டும் என்று மாணவர் கள்” விரும்பினார்கள். இல்லாவிடில் தாங்கள் செல்லமாட் டோம் என பிடிவாதம் பிடித்தார்கள். இயற்கைக் காட்சியினூடே ஸ்வாமியுடன் இணைந்து புகைப்படம் எடுக்க வேண்டும் என் பது அவர்களது ஆசை. ஸ்வாமியும் சரி என்று கூறி தொட்ட பெட்டா எனும் அழகிய மலை உச்சிக்குச் செல்ல பஸ் ஏற்பாடு களை செய்ததுடன் மாணவர்களை முன்னால் சென்று வழி பாடுகள் செய்யும் படியும் தான் பின்னால் விரைவாக வந்து சேர்வதாகவும் கூறினார்.

அவர்கள் சென்று சிறிதுநேரம் கழித்து காரில் ஸ்வாமியும் தொட்டபெட்டா புறப்பட்டார்.அவர் கிளம்பிய பின் ஸ்வாமியின் தரிசனம் பெற்ற இரு இளைஞர்கள் மோட்டார் சைக்களில் நந்தவனத்திற்கு வந்தனர். ஸ்வாமி புறப்பட்டு விட்டார் எனத் தெரிந்ததும் சுவாமியைப் பார்க்க அவர் காரை சென்றடைய வேண்டும். ஏன் அதனை தாண்டவேண்டும் என்ற படபடப் பில் விரைவாக மோட்டார் சைக்கிளை ஓட்டிச் சென்றனர். இதைப் பார்த்த ஸ்வாமியுடன்கூட காரில் இருந்தவர்கள் யார்? இவர் கள்? ரெளடிப் பையன்களா? என்றனர். ஸ்வாமி அதற்கு இல்லை, விபரம் தெரியாது எந்த முடிவுக்கும் வரலாகாது.



அவர்கள் என்னைத் தரிசிக் கவே ஆவலுடன் இருக்கிறார் கள் என்றார்.

சாலையின் திருப்பத்தில் இளைஞர்கள் ஸ்வாமியின் காருக்கு அருகில் விரைவாக வந்தனர். அந்த நேரம் வண் டியின் கட்டுப்பாட்டை இழந்து இருவரும் கீழே விழுந்தனர். உடனே ஸ்வாமி காரை நிறுத்தி அவர்களிடம் சென்று உடலைத் தடவி தூசையும் அழுக்கையும் துடைத்தவாறு அன்பார்ந்தவர்களே! உங்களுக்கு அடிபட்டதா? ஏன் இவ்வாறு செய்தீர்கள், என் னைப் பார்க்க வேண்டுமென்றால் நந்தவனம் வுந்து பார்த் திருக்கலாமே என்றார். உடனே அவர்கள் நாங்கள் உங் களைப் பார்க்க மிகவும் விரும்பினோம். ஆனால் இந்த விபத் தினால் தங்கள் தரிசனம் மட்டுமல்ல ஸ்பரிசத்துடன் சம்பாச னையும் கிடைத்தது. நன்றி ஸ்வாமி என்றனர். ஸ்வாமியும் அன்புடன் தடவிக்கொடுத்தார்.

ஜெய்சாயிராம் யாதவன்

## ஐந்து கார்க்குண்டுகள் அடுத்தடுத்து வெடித்தன
## ஈராக்கில் மரண ஓலம்; 100க்கு மேற்பட்டோர் பலி

(பக்தாத்)

ஈராக்கில் அடுத்தடுத்து நடந்த ஐந்து கார்க்குண்டுவெடிப்பில், மாணவர்கள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் உடல் சிதறி பலியாகியுள்ளனர். பக்தாத் அடுத்த தோராவில் தொழிலாளர் மற்றும் உள்துறை அமைச்சகங்கள் அருகே நேற்று முன்தினம் பொலிஸார் ரோந்துப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது, அங்கு நிறுத்தப்பட்டிருந்த கார்களில் இருந்து சக்தி வாய்ந்த வெடி குண்டுகள் வெடித்தன. அடுத்தடுத்து நடந்த இந்தத் தொடர் தாக்குதலில், பதினைந்துபேர் அதே இடத்தில் உடல் சிதறிப் பலியாயினர். இவர்களில் பெரும்பாலானவர்கள் கல்லூரி மாணவர்கள் மற்றும் பொலிஸார் ஆகும்.

இதேவேளை மேற்கு பக்தாத் மான்சூர் பகுதியில் உள்ள நீதிமன்ற வளாகம் மற்றும் ஷார்ஜா சந்தை அருகே நடந்த மற்றொரு குண்டுவெடிப்பில், நாற்பதுக்கும் மேற்பட்டவர்கள் இறந்தனர்.

இருநூறுக்கும் மேற்பட்டவர்களுக்கும் காயம் ஏற்பட்டதையடுத்து, மருத்துவமனைகளில் சிகிச்சைக்காக சேர்க்கப்படடுள்ளனர். இந்த இரண்டு குண்டுவெடிப்புச் சம்பவத்தில், நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பலியானதாக ஈராக் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த சில நாட்களாக அமைதியாக இருந்த ஈராக்கில்,அடுத்த வருடம் தேர்தல் நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், அதனை சீர் குலைக்கும் வகையில்,அல் - குவைதா பயங்கரவாதிகளால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டதாக ஈராக் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இருப்பினும் இந்தக் குண்டு வெடிப்புக்கு, எந்த அமைப்புக்களும் பொறுப்பேற்கவில்லை. (ஓ-2-6)

## பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் 51 பேர் கைது

(பெஷாவர்)

கடந்த சில நாட்களாக பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் நூற்றுக் கணக்கான மக்கள் உயிரிழந்தனர். எனவே, தலிபான் தீவிரவாதிகளை வேட்டையாடும் நடவடிக்கையில் அந்நாட்டு இராணுவம் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஆப்கானிஸ்தானின் வடமேற்கு எல்லையில் உள்ள வசிரிஸ்தான் மலைப்பகுதியில் தான் தலிபான்கள் பதுங்கியுள்ளனர். எனவே, அங்கு தீவிரவாதிகள் தேடுதல் வேட்டையில் இராணுவம் இறங்கியுள்ளது.


சுவாட் பள்ளத்தாக்கு பகுதியில் பதுங்கியிருந்த 47 தலிபான் தீவிரவாதிகள் கைதுசெய்யப்பட்டனர். அங்கு மேலும் 4 தீவிரவாதிகள் சரணடைந்தனர்.

வசிரிஸ்தான் மலைப்பகுதியில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட மேலும் பலர் விசாரணைக்கு பின் விடுதலை செய்யப்பட்டனர். சுவாட் பகுதியில் இராணுவத்தினரால் தேடப்பட்ட 10 தீவிரவாதிகள் சரணடைந்தனர்.

இதற்கிடையே வசிரிஸ்தானில் உள்ள ஷகாய்,ரஷ்மாக் ஆகிய இடங்களில் தலிபான் தீவிரவாதிகள் அதிரடித்தாக்குதலில் ஈடுபட்டனர்.அதில், உயிரிழந்தவர்களின் விபரம் எதுவும் தெரியவில்லை.

துவாகுலா,பாஷ் ஷியாரத் அருகே இராணுவம் மீது 10 ரொக்கெட் குண்டுகளை வீசித் தீவிரவாதிகள் தாக்கினர். இதற்கிடையே இராணுவத்திடம் சரணடைய மறுத்த தீவிரவாதிகளின் இருப்பிடங்களை இராணுவத்தினர் குண்டு வீசி அழித்தனர்.

மேலும், சுவாட் மாவட்டத்தில் உள்ள மிங்காரோவில் தீவிரவாதிகளின் 10 மோட்டார் படகுகளை கண்டுபிடித்து பொலிஸார் மூழ்கடித்தனர். (6)




## இந்திய மாணவர் மீது கத்திக் குத்து
## அவுஸ்திரேலியாவில் தொடரும் சம்பவம்

அவுஸ்திரேலியாவில் தங்கி இந்திய மாணவர்கள் பலர் படித்து வருகின்றனர். கடந்த சில மாதங்களாக அவர்கள் மீது இனவெறி தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன. இதில் பலர் படுகாயமடைந்தனர். இச் சம்பவத்துக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது. அவுஸ்திரேலியா சென்றிருந்த மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா அந்நாட்டு பிரதமரை நேரில் சந்தித்து இது குறித்துப் பேசினார்.

இதைத் தொடர்ந்து நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு தாக்குதல்கள் ஓரளவு குறைந்திருந்தது.இந்த நிலையில் தற்போது மீண்டும் அங்கு இந்திய மாணவர் ஒருவர் கடுமையாக தாக்கப்பட்டார். இந்தியாவைச் சேர்ந்த 23 வயது மாணவர் அங்கு படித்துக் கொண்டே வாடகைக்கு கார் ஓட்டி வந்தார்.

அப்போது அடையாளம் தெரியாத நபர் ஒருவர் இந்திய மாணவரின் மார்பில் கத்தியால் குத்திவிட்டுதப்பி ஓடிவிட்டார். இதை பார்த்த அவரது காதலி பொலிசுக்கு தகவல் கொடுத்தார். பொலிஸ் அதிகாரி கிரக் ஜான்சன் விரைந்து வந்து விசாரணை நடத்தினார். பின்னர் மாணவர் சிகிச்சைக்காக ஆஸ்பத்தியில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்படுகிறது. இனவெறி காரணமாக இந்த தாக்குதல் நடத்தப்படவில்லை. பணத்தைக் கொள்ளையடிக்கும் நோக்கத்தில் தான் இந்தச் சம்பவம் நடைபெற்றது என பொலிஸார் தெரிவித்தனர். (6)

## பாடசாலைப் படிக்கட்டு நெரிசலில் — எட்டு மாணவர்கள் மரணம் —
### சீனாவில் சம்பவம்

(பீஜிங்)

சீனாவில் ஒருபள்ளிக்கூடத்தில் படிக்கட்டில் ஏறுவதற்காக 400 மாணவர்கள் ஒரே நேரத்தில் திரண்டனர். இதனால் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 8 மாணவர்கள் பலியானார்கள். 26 மாணவர்கள் காயம்அடைந்தனர். இந்தச் சம்பவம், மத்திய சீனாவில் உள்ள ஹூனான் மாநிலம் ஜியாங்ஷியாங் நகரில் உள்ள தனியார் பள்ளிக்கூடத்தில் நடந்தது.

பலியான மாணவர்களில் ஒருவர் மட்டும் பெண். மற்றவர்கள் ஆண்கள். அவர்கள் அனைவரும் 11 முதல் 14 வயதுக்கு உட்பட்டவர்கள் ஆவார்கள்.

5 மாடிக் கட்டடமான இந்தப் பள்ளிக்கூடத்தில் வெளியேறுவதற்கு 4 வழிகள் உள்ளன. ஆனால் எல்லா மாணவர்களும் தங்கள் விடுதிக்கு அருகே உள்ள வழி மூலம் தான் வெளியேறுவது வழக்கம். இதனால் தான் நெரிசல் ஏற்பட்டுள்ளது. இச்சம்பவத்தையடுத்து பள்ளிக்கூட முதல்வரையும், நிர்வாகக்குழு தலைவரையும் பொலிஸார் கைது செய்தனர். பாடசாலையின் வங்கிக் கணக்குகளும் முடக்கப்பட்டன. (6-8)

## தீவிரவாதிகளை ஒடுக்காவிட்டால்
## அமெரிக்க இராணுவத்தை அனுப்புவோம்
### பாகிஸ்தானுக்கு ஒபாமா எச்சரிக்கை

(வோஷிங்டன்)

பாகிஸ்தானில் உள்ள தலிபான் உள்ளிட்ட தீவிரவாத முகாம்களை ஒழிக்காவிட்டால் அங்கு இராணுவத்தை அனுப்புவோம் என்று அமெரிக்க அதிபர் ஒபாமா எச்சரிக்கை விடுத்தார்.

பாகிஸ்தானில் தலிபான் உட்பட பல்வேறு தீவிரவாத முகாம்கள் உள்ளன. பலுசிஸ்தான் மற்றும் வடக்கு வசிரிஸ்தான் பகுதிகளில் தல்பான் தீவிரவாதிகளின் முக்கிய தளபதிகள் பதுங்கியிருக்கின்றனர். முல்லா ஓமர் தலைமையில் ஒரு குழுவும் சுரா என்பவன் தலைமையில் மற்றொரு குழுவும் தலிபான் இயக்கத்தில் செயல்படுகிறது.

அந்த குழுக்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என அமெரிக்கா விரும்புகிறது. இது தொடர்பாக பாகிஸ்தான் இராணுவ உயர் அதிகாரிகளுடன் அமெரிக்க அதிகாரிகள் பேச்சு நடத்தினர்.

அதன்படி பாகிஸ்தானுக்கு இராணுவத்தை அனுப்பி வைத்து தீவிரவாதிகள் பதுங்கி உள்ள இடங்களில் தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. தேவைப்பட்டால் அல்கொய்தா மற்றும் தலிபான் தீவிரவாத தலைவர்களை கொல்வதற்கு சிறப்பு அதிரடிப் படை நடவடிக்கைகளை தானாகவே மேற்கொள்ளவும் முடிபு செய்திருக்கிறது.



அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜெனரல் ஜேம்ஸ் ஜோன்ஸ் வெள்ளை மாளிகை தீவிரவாத ஒழிப்பு படை தலைவர் ஜான் ஓ பிரென்னன் ஆகியோர் பாகிஸ்தான் இராணுவத்தின் உயர் தளபதிகள் மற்றும் உளவுத்துறை அதிகாரிகளை சந்தித்து ஒபாமாவின் எச்சரிக்கையை தெரிவித்தனர்.

பாகிஸ்தான் அதிகாரிகளுடன் நடந்த சந்திப்பின்போது தீவிரவாதிகளை ஒடுக்குவதில் பாகிஸ்தான் முன்வராவிட்டால் அமெரிக்காவே தன்னிச்சையாக நடவடிக்கை எடுக்கும் என ஜெனரல் ஜோன்ஸ் எச்சரிக்கை விடுத்தார். (ஓ-6)

## மும்பை தீவிரவாதத் தாக்குதல் சதிக்கு மூளையாக செயற்பட்டவர் மீது வழக்கு

(சிகாகோ)

மும்பையில் கடந்த நவம்பர் மாதம் 26 ஆம் திகதி நடந்த தீவிரவாதிகள் தாக்குதலுக்கு மூளையாக செயல்பட்டவர் டேவிட் காலமன் ஹெட்லி (வயது 49) பாகிஸ்தான் வம்சாவளியைச் சேர்ந்த இவர் அமெரிக்காவில் சிகாகோ நகரில் குடியிருந்து வந்தார். அவரும் லஸ்கர் - இ- தொய்பா தீவிரவாத இயக்கத்தை சேர்ந்த உசேன் ரானேயும் கடந்த அக்டோபர் மாதம் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் மீது சிகாகோ நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது. இந்த வழக்கில் நேற்று முன்தினம் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஹெட்லி மீதான குற்றப் பத்திரிகையில் மும்பை தாக்குதல் நடக்கும் முன்பு இவர் இந்தியாவுக்கு 2005 ஆம் ஆண்டு முதல் 2008 ஆம் ஆண்டு வரை பல முறை சென்று இருக்கிறார்.

அப்போது மும்பையில் தாக்குதல் நடைபெற வேண்டிய இடங்களை தேர்வு செய்து அதற்கான திட்டங்களை தீட்டி லஸ்கர் - இ-தொய்பா இயக்கத்துக்கு வழங்கி இருக்கிறார். தீவிரவாதிகள் மும்பைக்குள் வரவேண்டிய கடல் பாதையை இவர் படகில் சென்று முன்னதாகவே பார்வையிட்டு அனுமதி வழங்கி இருக்கிறார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் இந்த வழக்கில் ஹெட்லி மீது குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவருக்கு ஆயுள் தண்டனை முதல் மரணதண்டனை வரை வழங்கப்படலாம் என்று சட்டத்துறை அதிகாரி ஒருவர் கூறினார். (ஓ-2-6)

## ஒசாமாவை கைதுசெய்யும் வரையில் ஆப்கான் யுத்தத்தை நிறுத்தமுடியாது
### அமெரிக்க படைத்தளபதி அறிவிப்பு

அல்கொய்தா தீவிரவாத அமைப்பின் தலைவர் ஒசாமா பின்லேடனை கைது செய்யும் வரையில் ஆப்கானிஸ்தானில் இடம்பெற்றுவரும் யுத்தத்தை முடிவுறுத்த முடியாது என அமெரிக்காவின் ஆப்கானிஸ்தானுக்கான படைத்தளபதி ஜெனரல் மெக்கிறிஸ்டல் தெரிவித்துள்ளார்.

ஒசாமா பின்லேடன் கொல்லப்பட வேண்டும் அல்லது கைது செய்யப்படவேண்டும். அவ்வாறு செய்யும் வரையில் கிளர்ச்சி தொட ரும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஆப்கானிஸ்தானுக்கான படைவீரர்களின் எண்ணிக்கையை அமெரிக்க ஜனாதிபதி 30 ஆயிரத்தினால் உயர்த்தியுள்ளார்.

அதிக படைவீரர்கள் நிலைநிறுத்தப்படுவதனால் யுத்த வெற்றிகளை ஈட்ட முடியும் என்றபோதிலும், ஒசாமா பெரும் சவாலாக திகழ்கின்றார் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எதிர்வரும் 18 மாத காலப்பகுதி மிகவும் முக்கியமானதென அவர் தெரிவித்துள்ளார்.




பின்லேடனைக் கொலை செய்வதன் மூலம் அல்கொய்தா இயக்கத்தை முற்று முழுதாக அழிக்கமுடியாது என்றபோதிலும், பின்லேடனை கைது அல்லது கொலை செய்வது அந்த அமைப்பினை நெருக்கடிக்கு உள்ளாக்கக் கூடிய மிகச் சிறந்த தந்திரோபாயம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆப்கானிஸ்தான்- பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் பின்லேடன் தங்கியிருப்பதாக இராணுவத் தளபதிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர். (ஓ-6)

# குமார் சங்கக்கார ரன் மழை; இலங்கை வெற்றியில் நனைந்தது

## காம்பீரின் அதிரடி வீணாகியது



(நாக்பூர்)

சங்கக்காரவின் அதிரடி அரைச்சதத்தின் மூலம் முதலாவது இருபது-20 போட்டியில் இலங்கை அணி 29 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணியை வீழ்த்தியது.

இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 2 இருபது-20 மற்றும் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இந்திய அணி 2:0 என்ற கணக்கில் கைப்பற்றிய நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது இருபது-20 போட்டி நேற்று நாக்பூரில் நடைபெற்றது.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய அணித்தலைவர் தோனி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு டில்சான்-ஜெயசூரியா ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 6.2 ஓவர்களில் 43 ஓட்டங்களை எடுத்த போது ஜெயசூரியா 20 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 26 ஓட்டங்களைப்பெற்று டைன்டாவின் பந்துவீச்சில் இஷாந் சர்மாவிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துக்களமிறங்கிய அணித்தலைவர் குமார் சங்கக்கார அதிரடியானத் துடுப்பாட்டத்தைவழங்க இலங்கை அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக எகிறியது.

இதில் திலகரட்ண டில்சான் 33 பந்துகளில் (5 பவுண்டரிகள் அடங்கலாக) 34 ஓட்டங்களை எடுத்து ரோகித் சர்மாவின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய மகேலஜெயவர்த்தன 09 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். மறுமுனையில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 21 பந்துகளில் தனது அரைச்சதத்தைப் பூர்த்திசெய்தார்.

எனினும் 4 ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-கப்புகெதர ஜோடி அதிரடியான ஆட்டத்தை வழங்க இலங்கை அணி வலுவான இலக்கை எட்டியது.

இதில் கபுகெதர 20 பந்துகளில் (7 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 47 ஓட்டங்களை எடுத்து நெகராவின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

இந் நிலையில் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சங்கக்கார-மத்யூஸ் ஜோடியும் அதிரடி இணைப்பாட்டத்தை வழங்க இலங்கை அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 215 ஓட்டங்களை குவித்தது.

இதில் அணித்தலைவர் குமார் சங்கக்கார 37 பந்துகளில் (11 பவுண்டரிகள், 2 சிக்ஸர்கள் அடங்கலாக) 78 ஓட்டங்களை எடுத்து ரன்-அவுட் முறையில் ஆட்டமிழந்ததுடன் அஞ்சலோ மத்யூஸ் ஆட்டமிழக்காமல் 4 பந்துகளில் (2 சிக்ஸர்கள் அடங்கலாக) 15 ஓட்டங்களையும் பெற்றார். பந்துவீச்சில் நெகரா, டைன்டா, யூசுப்பதான் மற்றும் ரோகித் சர்மா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 20ஓவர்களில் 216ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற கடின இலக்கை நோக்கி விரட்டிய இந்திய அணிக்கு சேவாக்-காம்பீர் ஜோடி சிறப்பான இணைப்பாட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 2.5 ஓவர்களில் 32ஓட்டங்களை எடுத்த போது விரேந்திர சேவாக் 14பந்துகளில் (3பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்சர் உட்பட) 26ஓட்டங்களை எடுத்து குலசேகரவின் பந்துவீச்சில் மத்யூசிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து தோனி களமிறங்க மறுமுனையில் காம்பீர் அதிரடி ஆட்டத்தை வழங்க இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை மளமளவென அதிகரித்தது.

இதில் காம்பீர் 19பந்துகளில் அரைச்சதத்தைப் பூர்த்தி செய்து அசத்தினார். எனினும் காம்பீர் 26பந்துகளில் (11 பவுண்டரிகள் உட்பட) 55 ஓட்டங்களை எடுத்த போது மத்யூஸின் பந்துவீச்சில் நேரடியாக போல்ட் செய்யப்பட்டு ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து தோனி9, றோகித் சர்மா 3, யுவராஜ் சிங் 6 ஓட்டங்களுடனும் யூசுப்பதானும் ஆட்டமிழந்து ஏமாற்ற இந்திய அணி 11.5 ஓவர்களில் 115ஓட்டங்களை எடுத்து 6-வது விக்கெட்டையுமிழந்தது.

இந்நிலையில் பின் வரிசை வீரர்கள் அதிரடித் துடுப்பாட்டத்தை வழங்கிய போதும் இந்திய அணி 20ஓவர்களில் 9விக்கெட்டுக ளை யுழந்து 186 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 29ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இதில் நெகரா 13பந்துகளில் (ஒரு பவுண்டரி, 2சிக்ஸ்சர் உட்பட) 22 ஓட்டங்களையும், ரெய்னா 21 ஓட்டங்களையும், டைன்டா 19 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் மத்யூஸ், ஜெயசூரியா ஆகியோர் தலா2 விக்கெட்டுகளையும், குலசேகரா, புஸ்பகுமார, டில்சான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இப் போட்டியின் நாயகனாக இலங்கை அணித்தலைவர் குமார் சங்கக்கார தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் இலங்கை அணி 2போட்டிகள் கொண்ட இருபது-20 தொடரில் 1:0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது.

இந்நிலையில் தீர்க்கமானதும் இரண்டாவதும் இறுதியுமான இருபது-20 போட்டி நாளை மறுதினம் நடைபெறுகிறது.

# இலங்கை வங்கியின் இளம் தொழில் முயற்சியாளர் வாண்மை விருத்திப் பயிற்சிக்குத் தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியினால் எதிர்வரும் 12 ஆம் 13 ஆம் திகதிகளில் நடத்தப்படவுள்ள மேற்படி பயிற்சிப் பட்டறைக்குப் பங்குபற்றுவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளன.

இப் பட்டறை இரு நாள்களும் காலை 8 மணி முதல் மாலை 5 மணிவரை நடைபெறவுள்ளது. மேலும் 12 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்.நூலக கேட்போர் கூடத்தில் அங்குரார்ப்பண விழா நடைபெற்று பின்பு ஆஸ்பத்திரியிலுள்ள இலங்கை வங்கி வட பிராந்திய காரியாலயத்தில் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

பயிற்சியின் முடிபில் சான்றிதழ்கள் வழங்கப்படும். பங்குபற்றும் பயிற்சியாளர்களுக்கு மதிய உணவு சிற்றுண்டிகளும் வழங்கப்படும் என வட பிராந்திய பொதுமுகாமையாளர் என். சிவரட்ணம் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு,

சு.அலைமகள் (இளவாலை), அ.டினோஷா (பாசையூர்-யாழ்ப்பாணம்), ப.அமிர்தா (கொக்குவில்), சி.அனுஷா (கரவெட்டி), தி.அனுசுயா (கோண்டாவில் கிழக்கு), அ.ஜீவாகரன் (உடுப்பிட்டி), ஆ.நிஷாந்தி (வரணி), பா.பேரின்பன் (மீசாலை), பா.பிரசாந்தன் (சுன்னாகம்), த.சஜனி (இளவாலை),

ச.ஹன்ஸ்ராஜ் (ஓட்டுமடம்), த.டயானா (யாழ்ப்பாணம்), க.பிரசாந் (கொக்குவில்), க. அஜந்தன் (பருத்தித்துறை), லோ.காயத்திரி (யாழ்ப்பாணம்), ஞா.சிறிதரன் (கோப்பாய்), தி. ஞானதர்ஷினி (ஆறுகால்மடம்), பி.கௌசல்யா (கொக்குவில்),

இ.ராஜா (பருத்தித்துறை), த.ஜசிக்கா (பருத்தித்துறை), ஜெ.சதீஸ்குமார் (கோப்பாய்), ர.ஜெயகலா (வல்வெட்டித்துறை), ஜெ.பவரூபன் (பருத்தித்துறை), கி.ஜெயராணி (சண்டிலிப்பாய்), யோ.பீற்றர் கொல்வின் (கொக்குவில்), பொ.யூடி நிரோஷா (யாழ்ப்பாணம்), அ. யூலியா (சூரியவெளி),

க.கயதாரணி (சுன்னாகம்), சு.கலைவாணி (வல்வெட்டித்துறை), வ.கலக்ஷனா (கைதடி), சு.கமலினி (சுன்னாகம்), க.பாவேந்தன் (கொக்குவில்), க.வினோஜிதா (வரணி), க. சக்திவேல் (மாதகல்), க.பவின் (சுழிபுரம்), க. விக்னேஸ்வரன் (காரைநகர்),

க.கமல் (பருத்தித்துறை), ஈ.கார்த்திகா (யாழ்ப்பாணம்), ந.கவிரேகா (பருத்தித்துறை), பா.கவிதா (வல்வெட்டித்துறை), பி.கிருஷ்ணரஜனி (கொக்குவில்), கி.கொயின்ஸ் (சுன்னாகம்), கு.வசந் (யாழ்ப்பாணம்), கு.அனுஷியா (வரணி), கு.அருட்கண்ணன் (திருநெல்வேலி),

கு.குகரதன் (வல்வெட்டித்துறை), கு.தயாளினி (சண்டிலிப்பாய்), ப.லபிதா (யாழ்ப்பாணம்), லோ.மயூரன் (கோப்பாய்), தி.லோஜினி (வட்டுக்கோட்டை), லோ.லாவண்ஜா வி.சி. (யாழ்ப்பாணம்), ம.தர்யூன் (சுன்னாகம்), ம. ரகுரமணன் (மாதகல்),

ம.செந்தில்ரூபன் (பண்டத்தரிப்பு), ம. கேதீஸ்வரன் (பருத்தித்துறை), ம.நாகமௌலி (கந்தர்மடம்), ம.மோகனதாஸ் (கொக்குவில்), ம.எல்லாளன் (யாழ்ப்பாணம்), மே.நாகமௌலி (யாழ்ப்பாணம்), ப.மதுரா (புற்றளை), வே.மேகலா (காரைநகர்),

தே.மிதுலா (அச்சுவேலி), மு.ரவிவர்மன் (உடுப்பிட்டி), மு.உதயகுமார் (யாழ்ப்பாணம்), ந.கனிவாசன் (மல்லாகம்), ந.இரத்தினவேணி (புற்றளை), ந.நவகாந்தன் (பருத்தித்துறை), ப.நிரோஜினி (சண்டிலிப்பாய்), ச.நிஷாயினி (நல்லூர்),

அ.நொவிநிஷியா (யாழ்ப்பாணம்), ப.குகதாசன் (மானிப்பாய்), ப.சூரியகுமார் (சுழிபுரம்), ப.நதீஷ் (மானிப்பாய்), ரா.பருவநிலா (மல்லாகம்), ப.கஜந்தன் (நயினாதீவு), பே.பிரேம்குமார் (பருத்தித்துறை), பு.ஜெனார்த்தனி (சுன்னாகம்), த.பிரவீணா (பருத்தித்துறை),

பி.யதுஷன் (அளவெட்டி), இ.சிவராம் (பருத்தித்துறை), நா.ரமேஷ்குமார் (வண்ணார்பண்ணை), இ.சரிந்தன் (யாழ்ப்பாணம்), தி. றஜீதா (பருத்தித்துறை), ம.றஜிதா (அளவெட்டி), ரா.வகிர்தன் (சித்தன்கேணி), ர.செந்தூரன் (வேலணை),

ஆர்.விஜயரஞ்சன் (பருத்தித்துறை), ஆர். சுதர்ஷன் (பருத்தித்துறை), றெறினா கிரிஷாயினி (திருநெல்வேலி), எஸ்.கௌரிசங்கர் (பருத்தித்துறை), எஸ்.ஜெயசோதி (வல்வெட்டித்துறை), எஸ்.துஷ்யந்தினி (கரவெட்டி), எஸ். வாகீசன் (கரவெட்டி),

ச.அர்ச்சுதன் (நீர்வேலி), ச.சலஷலோசனன் (தெல்லிப்பளை), ச.திலீப்காந் ( சங்கானை), ச.நிசாந் (சுன்னாகம்), ச.அருளகன் (மானிப்பாய்), சஞ்ஜீவன் (நல்லூர்), செ.சிவசங்கர் (திருநெல்வேலி), செ.நிஷாந்தன் (மாதகல்), வெ.ஷாமினி (யாழ்ப்பாணம்),

ச.நஜீதன் (சுன்னாகம்), செ.சர்மினி (மானிப்பாய்), சி.பிரகலாதன் (நாவலர் வீதி- யாழ்ப்பாணம்), சி.விமலேஸ்வரன் (மூளாய்), சி. சிந்துஜா (பருத்தித்துறை), சி.பிரசாந் (கொக்குவில்), சி.டெக்ஷி (சுன்னாகம்),

தா. சிவதர்ஷினி (மந்திகை), சி. சிவவானதி (பருத்தித்துறை), சி.சிவரூபன் (கல்வியங்காடு), க.சியனி (மல்லாகம்), த.ஷோகிதா (வல்வெட்டித்துறை), சோ.சாந்தரூபன் (வேலணை), சூ.கஜீரன்(கோண்டாவில்), சூ.சுகுமார் (நீர்வேலி),

சௌ.எழிதரன் (கொக்குவில்), பு.சுபாசினி (சாவகச்சேரி), சு.உதயசங்கர் (திருநெல்வேலி), சி.சுயதர்ஷினி (கோப்பாய்), ப.சுமதா (தொண்டைமானாறு), சு.கணேஷ்குமார் (பருத்தித்துறை), ப.சுரேகா (தொண்டைமானாறு), ரி.நிவேதினி (வல்வெட்டித்துறை), ரி.சிவரூபன் (யாழ்ப்பாணம்),

ரி.தர்ஷினி (வல்வெட்டித்துறை), தி.திலீபன் (யாழ்ப்பாணம்), த.அர்ச்சுனராஜா (பருத்தித்துறை), ச.தனலெட்சுமி (பருத்தித்துறை), த.தயாளினி (வல்வெட்டித்துறை), ப.தயாளினி (வல்வெட்டித்துறை), த.தர்ஷிகா (வல்வெட்டித்துறை), க.தாரணி (கொக்குவில்), த.தவமணி (வண்ணார்பண்ணை),

த.சிவகரன் (பருத்தித்துறை), ந.தயாநிதி (யாழ்ப்பாணம்), ச.தயாநிதி (யாழ்ப்பாணம்), தீபிகா (புற்றளை), தெ.பன்னீர்ச்செல்வம் (மானிப்பாய்),

மா.திலானி (யாழ்ப்பாணம்), தி.கோபிநாத் (மானிப்பாய்), து.ஆபிரகாம்லிங்கன் (சுன்னாகம்), து.மகேந்திரன் (மல்லாகம்), கு.உஷாநந்தினி (சண்டிலிப்பாய்),

உ.கருணன் (பருத்தித்துறை), வி. தர்ஷிகா (வண்ணார்பண்ணை மேற்கு), தே.வக்சலா (வல்வெட்டித்துறை), தி.வானதி (கைதடி), அ.வவுனா (வேலணை), வீ.முகிலன் (கொடிகாமம்), வி.அரவிந்தன் (சுழிபுரம்), வெ.குணசீலன் (பருத்தித்துறை),

வி.ஜசிந்தன் (பருத்தித்துறை), த.வினோதினி (கைதடி), வி.சுவிகரன் (திருநெல்வேலி), யோ.செந்தூரன் (கொக்குவில்).

# இலவச பாடநூல் வழங்கும்...

நலத்துறை அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா தகவல் ஊடகத்துறை மற்றும் முதலீட்டு ஊக் குவிப்பு அமைச்சர் பிரியதர்ஷன யாப்பா ஆகி யோர் கலந்து சிறப்பித்ததுடன் சிறப்பு அதிதி களாக கல்விச்சேவைகள் அமைச்சர் கொத் தாலவல, கல்வி பிரதி அமைச்சர் எஸ்.சச்சிதா னந்தன், யாழ். மாநகர மாதா திருமதி யோகே ஸ்வரி பற்குணராசா, யாழ். மாநகரசபை உறுப்பி னர் மௌலவி சிபியான், பரீட்சைகள் ஆணை யாளர் அனுர எதிரிசிங்க, வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் மற் றும் வேம்படி மகளிர் கல்லூரி அதிபர் திருமதி பொன்னம்பலம் ஆகியோர் கலந்து கொண் டனர்.

இவர்களுடன் வடக்குமாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.இராசையா, யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண் முகலிங்கன் மேலதிக மாகாணக்கல்விப் பணிப் பாளர் வி.ரி.செல்வரட்ணம் மற்றும் யாழ். மாவட்ட வலயக்கல்விப் பணிப்பாளர்கள், பாட சாலை அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாண வர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நேற்றுக்காலை 9.00 மணிக்கு யாழ். பலாலி விமான நிலையத்திற்கு வருகை தந்த அமைச்சர்கள் குழுவினரை சமூக சேவை கள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக் ளஸ் தேவானந்தா வரவேற்றார்.

தொடர்ந்து யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யில் நேற்றுக்காலை 10.00 மணிக்கு தேசிய கொடி யேற்றலுடன் பாடநூல்கள் வழங்கும் தேசிய வைபவம் ஆரம்பமானது.

இதில் தலைமை உரையைத் தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செய்மதியூ டாக உரையாற்றினார். ஜனாதிபதியின் யாழ். வருகை திடீரென ரத்தானதால் அவர் யாழ்ப் பாணத்துக்கு வரமுடியவில்லையென நிகழ் வில் தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து யாழ்ப்பாணப் பாடசாலை களின் மாணவர்களின் தமிழ் பண்பாட்டுக் கலை நிகழ்வுகள் தென்னிலங்கை பாடசாலை மாணவர்கள் சிங்களக்கலை நிகழ்வுகளை வழங்கியதுடன் தமிழ், முஸ்லிம், சிங்கள மாண வர்கள் ஒன்றிணைந்து தமிழ் சிங்கள மொழிகளிலான சமாதானப் பாடலை பாடி னார்கள்.

இதனையடுத்து பாடசாலை மாணவர் களுக்கு இலவசப்பாட நூல்களையும் ஆசிரி யர்களுக்கான கையேடுகளையும் அதிதிகள் வழங்கிவைத்ததுடன் சிரேஷ்ட மாணவர்கள், கனிஷ்ட மாணவர்களுக்கு தமது பாடப்புத் தகங்களை வழங்கி பாடநூல்களுக்கு மரியாதை செலுத்தினர்.

இந் நிகழ்வில் ஊடகத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, பிரதிக்கல்வி அமைச்சர் எஸ்.சச்சிதானந்தன், சமூகசேவைகள் மற்றும் சமூகநலத்துறைஅமைச்சர்டக்ளஸ்தேவானந்தா ஆகியோர் சிறப்புரையாற்றினர். (ச-5)

# மாணவர்கள் கல்வி கற்கக்கூடிய நல்ல சூழல் ஏற்பட்டுள்ளது – ஜனாதிபதி

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்டு மாண வர்கள் நிம்மதியாக கற்கக்கூடிய சூழ்நிலை ஏற் பட்டுள்ளதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரி வித்தார். நேற்று யாழ். வேம்படி மகளிர் கல்லூரி யில் நடைபெற்ற புத்தகம் கையளிக்கும் நிகழ் வில் செய்மதி மூலம் தமிழில் உரையாற்றும் போது ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த வரு டம் புதிய வகுப்பில் கல்வி கற்கவுள்ள மாண வர்களுக்கு புதிய புத்தகத்தை தருகின்றோம்.

விடுமுறை காலத்தில் புதிய புத்தகத்தில் உள் ளவற்றை கற்க வேண்டும். இந்த நாட்டில் இல வசக் கல்வி, இலவச பாடப்புத்தகங்கள் என்பதற் கிணங்க இவற்றை சீராக வழங்குகின்றோம் படித்தல் மட்டும் போதாது நல்ல குணம் இருக்க வேண்டும். மாதா, பிதா, குரு ஆகியோரை மதித்து நல்லொழுக்கத்தை கடைப்பிடிக்க வேண்டும்.

வடக்குகிழக்கு மாணவர்கள் கடந்த காலங் களில் பயங்கரவாதத்தால் பல துன்பங்களை எதிர்கொண்டிருந்தனர். ஆனால் தற்போது நீங்கள் நிம்மதியாக கல்விகற்க முடியும் என் றார். (ச-5)

## ஆபரணக் கைத்தொழிற்சாலை யாழில் அமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் ஆபரணக் கைத் தொழிற் சாலை ஒன்றை விரைவில் அமைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக ஊடகத் துறை மற்றும் முதலீட்டு பயிற்சி ஊக் குவிப்பு அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித் தார்.

2010ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூ ல்கள் கையளிக்கும் நிகழ்வு நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றது. இதன் போது அவர் உரையாற்றுகையி லேயே இத னைத் தெரிவித்தார்.

கடந்த 30வருடகாலங்களாக இடம்பெற்ற யுத்தத்ததிலிருந்து நாம் இப்போது விடுவிக் கப்பட்டுள்ளோம். யுத்தம் முடிபடைந்துள்ள மையால் இலவச பாடநூல்களை ஏ-9 பாதை யூடாக விரைவாக எடுத்து வரக்கூடியதாக இருந் தது என்றார். (ச-5)

# இராணுவச் சிப்...

தாக தெரிவிக்கப்படுகிறது. இவரது சடலம் பலாலி இராணுவ வைத்தியசாலைக்கு எடுத்துச் செல் லப்பட்டுள்ளது. (ச-5)

# சுதந்திரக்கட்சி...

இந்நிகழ்வில் அமைச்சர் டக்ளஸ் தேவா னந்தா, ஊடகத்துறை அமைச்சர் அநுர பிரி யதர்சன யாப்பா, பிரதிக் கல்வி அமைச்சர் சச்சி தானந்தன், அமைச்சர் நர்மல் கொத்தலா வல உட்பட பலர் கல்ந்து கொண்டனர். (ச-5)

# அமெரிக்காவின் உதவி...

இலங்கைக்கு 2 நாள் உத்தியோக பூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமெரிக்காவின் தென் ஆசிய மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமைச்சர் றொபேர்ட் ஓ பிளேக் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மற்றும் முன்னாள் இராணு வத் தளபதி ஜெனரல் சரத் பொன்சேகா ஆகி யோரை சந்தித்து ஜனாதிபதித் தேர்தல் தொடர் பில் ஆராய்ந்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு அலரி மாளிகை யில் ஜனாதிபதியுடனான சந்திப்பு இடம்பெற் றுள்ளது. சரத் பொன்சேகாவுடன் நேற்று பேச்சு கள் இடம்பெற்றுள்ளன.

சரத் பொன்சேகாவுடன் இடம்பெற்ற பேச்சு களின் போது ஐக்கிய தேசியகட்சி, சிறிலங்கா சுதந்திர கட்சியின் மக்கள் பிரிவு, ஜனநாயக மக்கள் முன்னணி ஆகியகட்சிகளின் அங் கத்தவர்களும் இருந்தனர்.

இச்சந்திப்பில் தேர்தல் முறைகேடுகள், வேட்பாளர்கள் மற்றும் பிரமுகர்கள் ஆகி யோருக்கான அச்சுறுத்தல்கள் போன்றவை குறித்து ஆராயப்பட்டுள்ளது.

இதேவேளை தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம் பந்தன், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலை வர் ரவூப் ஹக்கீம் ஆகியோரை யும் றொபேட் ஓ பிளேக் நேற்று சந்தித்துப் பேசினார். (ச-5)

# ஏமாற்றத்துடன்...

கொள்வார் என ஜனாதிபதி செயலகம் அறி வித்தி ருந்தது.

அதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப் பட்டிருந்தன. இந்நிலையில் யாழ்ப்பாணத் தில் காணாமல் போனோரின் உறவுகள் நூறிற்கும் மேற்பட்டோர் ஜனாதிபதியை சந்திப் பதற்கு யாழ். வேம்படி மகளிர் கல்லூரிச் சூழ லில் காத்துக்கிடந்தனர்.

எனினும் அவர் வருகை தராததால் அவர் கள் ஏமாற்றத்துடன் வீடுகளுக்குத் திரும் பினர். (ச-5)


## நியூ சிற்றி ரேடர்ஸ் இடமாற்றம்

சொனி , பனசொனிக், LG, கோல்ஸ்ரார் 14" 17" 21" கலர் T.V, DVD பிளேயர், டிஸ் TV ,ஈரோ கோல்ட் ரிசீவர் ,சொனி ,பைனியர் க்ார் ரேடியோ ,கார் CD ,றேடியோ ,கசற் ரெக்கோடர் MP-3,MP-4 பிளேயர் , அம்பிளிபையர் ,பவல்ஸ் ,வூபர்ஸ் ,எலக்ரோனிக் திராசுகள் ,சுவர் மேசை கை மணிக்கூடுகள் ,கல்குலேட்டர்கள், ரெலிபோன் பற்றி ,சார்ச்சர் ,அன்ரனா ,6 பிளாஸ் ரோச் ,DVD ,பாட்டு CD, மண்ணெண்ணெய் குக்கர்கள் ,காஸ் குக்கர்கள் இவற்றை நிதான விலையில் பெற்றுக்கொள்ளவும் மேற்குறிப்பிட்ட பொருட் களை சிறந்த முறையில் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாடுங்கள்.

நியூ சிற்றி ரேடர்ஸ்,
319 A, K.K.S. றோட், யாழ்ப்பாணம்.
T.P.:- 021 222 3226
(C-3864)


# புதுமாத்தளனில் இரா..

விக்டர் சூசை தெரிவித்தார். இதன் பின்னர் வவுனியா செட்டிக்குளம் மெனிக்பாம் இடைத்தங்கல் முகாமிற்கு விஜ யம் செய்த ஜனாதிபதி அங்குள்ளவர்களின் நிலைமைகள் குறித்து நேரில் கண்டறிந்தார்.

இந்த விஜயத்தின்போது அவருடன் மீள்குடியேற்ற அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் றிஷாட் பதியுதீனும் சென்றிருந்தார்.

மெனிக்பாம் இடம் பெயர்ந்த மக்கள் வாழ்கின்ற நிவாரண கிராமங்களில் வாழ் கின்ற மக்களை சந்திப்பதற்காக முதற் தடை வையாக ஜனாதிபதி நேற்று அங்கு விஜயம் செய்தார். அவர் அங்கு மக்களோடு தமிழிலே பேசினார்.

விடுதலைப் புலிகளுடன் இணைந்து இருந் தார்கள் என்ற சந் தேகத் தின் பெயரில் விசேட முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருப் பவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்று மெனிக்பாம் முகாமைச் சேர்ந்தவர்கள் ஜனாதி பதியிடம் வேண்டுகோள் விடுத்தனர்.

அதற்கு புதிய புனர்வாழ்வு நடவடிக்கை களை வழங்கி அவர்களை நாங்கள் உங்க ளோடு சேர்ப்போம் இதனோடு இந்த நாட்டி லே பயங்கரவாதம் என்ற ஒன்று இனிமேல் உருவாகக்கூடாது என ஜனாதிபதி பதிலளித் தார். (ச-3)


## பொருளியற் கல்லூரி யாழ்ப்பாணம்

A/L DAY CLASS

தமிழ்

திரு. N.சத்தியவேந்தன் B.A (Hons), M.Phil (Jaffna)

பிரிவு I – திங்,செவ்,புத,வியா,வெள் காலை 8–10 வரை
பிரிவு II – சனி, ஞாயிறு பிற்பகல் 2–4 வரை

முழுப்பாடத்திட்டமும் பூர்த்தி செய்யப்படும்.
கடந்த 10 வருட வினாக்களும் மீட்டல் செய்யப்படும்.
மாதாந்தம் பரீட்சைகள் நடைபெறும்.
(C-3862)

## A/L 2010 DAY CLASS

(கலைப்பிரிவு) ( சனி, ஞாயிறு)

| நேரம் | பாடம் | நேரம் | பாடம் |
|---|---|---|---|
| 7–8 | நாடகம் | 10–11 | இந்துநாகரிகம் |
| 8–9 | புவியியல் | 11–12 | தமிழ் |
| 9–10 | அரசியல் | 12–1 | வரலாறு |
| | | | அளவையியல் |

DMI Jaffna
(C-3897)

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

Diploma Courses... பதிவுகளை 14 12 2009 முன்னர் செய்யுங்கள்
*MS Office *Accounting*MAYA(Graphics 3D)
*Printing & ICDL Typing,Hardware*English
*Web Designing* Video Editing *AutoCAD
* VB.net,LINUX,O/L ICT,A/L GIT,Kids Program

International Courses...
MCSE Spl_Network Security, CIMA, IELTS
Cisco-CCNA, ICDL-AutoCAD,BCS
Sun Java programmer,Red Hat Engineer

Degree Course-University of Colombo
* Diploma in -IT,Higer Diploma-IT,* Bachelor-IT

Free:Hardware,ICDL AutoCAD,ICDL-International Computer Driving Licence,
50%Off:Java (Awarded by Sun)

மேலதிக விபரங்களுக்கு நேரில், 324, பலாலி வீதி,யாழ்ப்பாணம் பரமேஸ்வரா சந்தி அருகில்,
0772395895 Bus Route - 764
MCS Supported By UNDP/JRRP

## கலாலயா

பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் – யாழ்ப்பாணம்

மகளிருக்கான துரித குறுகிய கால பயிற்சிகள்

விடுமுறைக் கால 12 நாள் வகுப்புக்கள்

- கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் பண்ணுதல், முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், முடி வெட்டுதல்.
- Facials மற்றும் மணப்பெண்கள் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல், கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் (Pedicure, Manicure.)
- பப்றிக் வர்ணம் தீட்டுதல் (Fabric Painting)
- Saree Work (சேலையில் அலங்காரவேலை செய்தல்)
மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.
- தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts தைத்தல்
மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் – 14–12–2009 காலை 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.





University of Colombo
BIT
Call 772395895
Bachelor of Information Technology (UCSC)
Want to Qualify in IT?
3 Pass A' Levels? → Register for BIT
No Pass A' Levels? → Foundation in Information Technology
MCS 324,Palaly Road,Parameswara Junction
Web site : Http://www.mcsitcampus.org

## சிறப்பான ஆரம்பத்துடன்

தரம் 1 முதல் O/L வரை தமிழ் மொழி மூல, ஆங்கில மொழி மூல வகுப்புகள் நடைபெறுகின்றன.

புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

நாவலர்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(C-3880)

## FedEx Express நத்தார் புது வருடத்தை முன்னிட்டு விசேட சலுகைகள்

232 நாடுகளுக்கான உள்நாட்டு வெளிநாட்டு துரித பொதிகள் தபால்கள் சேவை

விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை

குறைந்த கட்டணத்திலான உள்நாட்டு வெளிநாட்டுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

திருமுருகன் கொம் நெற்

259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 222?835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ப.நோ.சங்கம் முன்பாக)

TCN EXPRESS
28, Nelson Place, Colombo -06


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2009 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.